மாலை 2. மணி 7

ஜூலை 36.

---

ஓர்

உயரிய

மாதப்பத்திரிகை.

பழனி.

கல்வியும்

தேவஸ்தானங்களும்

அபுருபமாக

ஜாதி பேதம் ஒழிக

நாயகனை...

கல்வி மந்திரி.

விரை ஒழியாய்

பிரசவம்.

விவரங்கள்

அட்டவணையில் காண்க.



JL
ma41, N135CN
N136·2·
159931

1. கல்வியும் தேவஸ்தா[illegible] … 309
2. அழகு ராணி! … 312
3. அபிசீனியாவின் வீ[illegible] … 314
4. பழனி நகரசபை புதி[illegible]லைவர் … 316
5. கவியின் எண்ணம் … … 317
6. தமிழ்பாஷையின் தோற்றம் … 324
7. நாமகரணம்! … … 327
8. ஜாதிபேதம் ஒழிக … … 330
9. அடக்கத்தின் அவசியம் … … 332
10. எதிரொலி … … 337
11. குணவாகடம் … … 341
12. ஜலதோஷம் … … 345
13. மருந்து செய்பகுதி … … 347
14. வேதவியாசர் முதற்காண்டம் … 348
15. நாகானந்தன் … … 349
16. செய்தித் திரட்டு … … 354
17. உள்ளூர்ச் செய்தி. … … 357



சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு உள் நாடு | … ரூ | 0—8—0. |
| ,, வெளி நாடு | … ரூ | 1—0—0 |
| தனிப்பிரதி | … ரூ | 0—0—9. |
| ஜீவிய சந்தா | …. ரூ. | 10—0—0 |

புதிதாய் சேருகிற சாந்தாதார்களுக்கு அவர்கள் பணம் அனுப்பி சந்தாதாரராய்ச் சேருகிற மாதத்திலிருந்து ஒரு வருஷத்திற்கு பத்திரிகை அனுப்பப்படும். சந்தாவை மணியார்டரில் அல்லது ஸ்டாம்பாக அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பினுல் 6 அணு அதிகம் செலவாகும்.

விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| ஒரு தடவைக்கு முழுப்பக்கம் | ரூ. 5—0—0 |
| ,, அரைப்பக்கம் | ரூ. 3—0—0, |
| ,, கால்பக்கம் | ரூ. 1—8—0. |

விலாசம்:— மானேஜர்,
சித்தன்,
பழனி; S. I.



# "சித்தன்"

பழனி.

ஓர் உயரிய மாதப்பத்திரிகை.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்"

ஆசிரியர்— C. P. சாமி.

| மாலை 2. | ஜுலை 1936. | மணி 7. |
|---|---|---|


## கல்வியும் தேவஸ்தானங்களும்.

பல்லாண்டுகளாய் அறியாமை என்னும் அந்தகாரத்தில் ஆழ்த்தப்பட்டு கேவலம் கிணற்றுத்தவளை களாய் வாழ்க்கை நடத்தும் நம் பாரதசமுதாயம் புத்துணர்ச்சிபெறவும், கல்வி, கேள்வி, ஆராய்ச்சிகளில் பூத்தும் கைத்தொழில், வியாபாரம், வாணிபம் முதலிய துறைகளி[illegible] பொலிவுற்றும் வாழ நம் மாபெரும் தலைவர்கள் அன்[illegible] முதல் இன்றுவரை 'கல்வி, கல்வி' என்றே முறை[illegible] வருகின்றனர். ஆனல் பேதைகளாகிய நாம் அவ்வுபதேசங் களை செவிடன் காதில் ஊதின சங்குபோல் ஒரு[illegible] சிந்தியாது வீண்காலம் கடத்தி வருகின்றோம். என்னே நம் மதியீனம்! காலஞ்சென்ற கோபால கிருஷ்ண கோகலே அவர்கள் சுமார் 50 ஆண்டுகட்கு முன்னரே நம் நாட்டில் ஆரம்பக் கல்வியின் அபிவிருத்திக்கு விதை ஊன்றினர். அப்புண்ணியவானது தீவிரஉழைப்பினுலும் [illegible] சபையில் ஆரம்பக்கல்வி மசோதா

தன்.
சித

வுகளின் பயனும் நாம் இது
செய்த நிகரற்ற சொற்பொழிக்கடலைக் கண்ணால் பார்க்கும்
ஓர் சிறிது கல்விராம்.
ந்துள்ளே
நன்றே
"கற்கை நன்றே கற்கை நன்றே"
பிச்சை புகினும் கற்கை.
கற்றோர் முகத்திரண்டு
கண்ணுடையர் என்பர் ரதார்"
புண்ணுடையோர் கல்ல
துயிர்க்குற்ற துணை"

18593

கல்வியி ங்கில்லை சிற் களும் மானிடவர்க்கம் உண்
என நமது தமிழ்ப் பெரியோர் தற்கு கல்வியே சிறந்த சாத
மையான வாழ்க்கை நடத்துவ் துள்ளார்கள். எனவே எத்
னமென்று முக்காலும் போதித உற்ற துணையாயும், கைப்
தகைய நிலைமையிலும் நமக்குளாயும், சீரிய நண்பனுயும்,
பொருளாயும், மெய்ப்பொருவிவுச்சுடருடன் விளங்கவைக்
பேருபகாரியாயும் நம்மை ஆற்றிய இக்கல்வியை நாம் அடை
கும் சர்வ வல்லமை பொருந்தி
தல் மிக மிக அவசியமாம்.

நாட்டு அநேக சன்மார்க்கத்
இந்நாட்டில் தொன்றுதெருவது கண்கூடு. அதாவது
திருப்பணிகள் நடைபெற்றுவரும், மடாலயங்களும் இதா
நமது மாபெருங்கோவில்களி திருப்பணிகளின் நிலையங்
தர்ம ஸ்தாபனங்களும் மேற்கூ களின் நோக்கம் யாதெனில்
களாம். இவ்வித ஸ்தாபனங்லும், உத்தம வாழ்க்கையிலும்
மக்கள் யாவரும் சமய நெறியித் செவ்வனே புரிந்து அறிவும்
தவறாது தத்தம் கருமங்களை தமின்றி ஒழுக வேண்டுமென்
அன்பும் பூண்டு, யாவரும் பே த்தில், இந்நாட்டில் எங்கும்
பதேயாகும். பண்டைக் கால நந்தமையால் கல்வியின் அபி
செல்வம் தழைத்தோங்கி இல்லா நிலயங்கள் ஏற்படவில்லை
விருத்தி கருதி பிரத்தியேக க க்கிறது. மேலும் அக்காலத்
என்றே யூகிக்கவேண்டி இருக்முறையிலும், எளிய முறை
தில் நாட்டுக்கல்வி இயற்கை ப்ரசாங்கக் கல்வியும் சுதேச
யிலும் பரவி வந்ததுடன் அ
பாஷையில் நடைபெற்றுவந்தது
உணருமிடத்து இன்று
காலதேசவர்த்தமானங்களை கள் இந்நாட்டில் அவ்வளவு



ஏனெனில் இத்தர்ம ஸ்தாபனங்களால் யாதொரு நன்மையும் இல்லையென்றும் அவை யாவும் வியர்த்தமென்று முடிவு கட்டுகின்றனர்.

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்னும் நாயனார் கூற்றிற்கிணங்க, இவ்விஷயத்தைப் பகுத்தறிவு கொண்டு சற்றேனும் அலசிப் பார்ப்போமானால் இந்நிலயங்கள் நம் அறிவு வளர்ச்சிக்கு எவ்விதத்திலும் உதவிசெய்வதாக இல்லை என்றும், ஏதோ சிற்சிலகூட்டத்தாரின் நன்மைக்காகவே இருந்து வருகின்றனவென்றும் புலப்படாமற்போகாது.

இத்தகைய நிலையில் இவைகள் இருப்பதா? போவதா? என்பதே முக்கிய கேள்வி. இவ்விருபதாம் நூற்றாண்டில் இவ்வுலகின்கண் ஆங்காங்கு சீரும் சிறப்பும் அடைந்துவரும் ஏனைய பகுதிகளில் வாழும் மாந்தர்க்கு ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு ஸ்தாபனமும் ஒவ்வொரு கழகமும் உடுக்கை இழந்தவர்க்கு உதவுகைபோல் பெரிதும் உதவிசெய்து அவர்களை முன்னணியில் கொண்டுவரக்கூடியவைகளாயிருக்கும் போது, நம் நாட்டிலுள்ள மேற்கூறிய தர்ம ஸ்தாபனங்கள் விழலுக்கிறைத்த நீர்போல் யாதொரு பயனுமின்றி நடைபெறுவது பெரிதும் விசனிக்கத்தக்கதேயாகும்.

ஆதலால் இத்தர்ம ஸ்தாபனங்கள் நம் நாட்டுக் கல்வியின் அபிவிர்த்திக்கு ஏதுவாய் வளரவேண்டுமென்பதே நமது விருப்பமாகும். உதாரணமாக, பல்லாயிரக்கணக்கான வருவாயுள்ள வடமலை என்னும் திருப்பதியில் ஓர் உயர்தரக் கலாசாலை ஷை தேவஸ்தானத்தாரால் நிர்மாணிக்கப்பட்டு நடைபெற்றுவருவது மகிழ்ச்சிக்குறிய விஷயமாகும். அவ்வாறே இப்புராதன பழனி, தேவஸ்தானத்திலும் கல்வி முன்னேற்றமாக இயன்றளவு உதவி நம் நகரில் போதிய அறிவு வளர்ச்சியுறுமாறு முன்வருவார்களென்று பெரிதும் எதிர்பார்க்கிறோம். மேலும், இத்தர்ம ஸ்தாபனங்களைப் பரிபாலித்துவரும் சென்னை இந்துமத தர்ம பரிபாலன போர்டார் அவர்களும் இவ்விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்துவார்களென்றே கருதுகிறோம்.

# ✻ அழகுராணி. ✻

அழகிகளினின்றும் வீரர்கள் உதிக்க வேண்டும். அதுவே அவர்கள் சமூக சேவை.

முஸ்தபா கமால்பாஷா.

“ஐரோப்பாவின் நோயாளி”யாயிருந்த துருக்கி இப்போது சமூக சீர்திருத்தத்திலும், கல்வியிலும், நாகரீகத்திலும் தினைதினை வளர்ந்துவருவது கண்கூடு. இவ்வளவு தீவிர முற்போக்குக்குக் காரணம் முஸ்தபா கமால்பாஷா தான் என்பது எல்லோருக்கும் தெரியும். வீரக்கமால்பாஷா தீவிர சீர்திருத்தவாதி-சிறந்த அறிவாளி-துருக்கியை உலகமே மதிக்கும்-பின்பற்றும் நாடாக ஆக்குவதில் முனைந்து வேலைசெய்துவருகிறார். அவருக்கு பகலில் எண்ணமும்-இரவில் கனவும் அதுவே.

துருக்கியில் ஸீவாஸ் ஜில்லா என்றொரு பிரதேசமிருக்கிறது. அங்குள்ள கிராமக்குடியானவன் குமாரத்தி ஒருவள் இருக்கிறாள். அவள் பெயர் “ரம்பியா அஹமத்” என்பதாகும். அவள் மிகுந்த வடிவழகி. அதிரூபலாவண்யம் மிக்க சுந்தரி. பொதுவாக துருக்கிப்பெண்கள் அழகுடையவர்களே எனினும் இம்மாது அவர்களில் தலைசிறந்த வசீகர வடிவழகியாய் விளங்கியதால் “அழகுராணி” என்ற பெயரும் பெற்றிருந்தாள்.

‘மஹ்யூப்ஸலீம்’ என்ற வாலிபக்கட்டழகன் அவளது காதலன். அவர்கள் இருவருடைய பெற்றோரும் அவர்களை விவாகம் செய்விக்க முடிவுசெய்திருந்தனர். ஆனால் அப்பெண் தன் அழகின்மீது கர்வங்கொண்டவளாய் இருந்ததோடு தன் பெற்றோர் வார்த்தைக்கு அடங்கி நடக்கப் பிரியப்படாதவளாயும் காணப்பட்டாள். தன் அழகை உலகோரெல்லோரும் கண்டுபோற்றி, தன்னைக் கொண்டாடவேண்டுமென்ற ... ஆசையும் கொண்டிருந்தாள். எனவே



அவள் சில அழகு வேட்டையாடுவோர்களின் துர்ப்போதனையின்மீது பிரஸ்ஸல்ஸ் நகரில் நடைபெற்ற சர்வதேசப்பெண்கள் அழகுப் போட்டிக்குச் செல்லத் துணிந்துவிட்டாள்.

அவளது காதலனுக்கு இச்செய்தி எட்டியது. தன் காதலியை போகவொட்டாது தடுக்கவெண்ணி கமால்பாஷாவிடம் புகார்செய்தான். மறுநாள் அப்பெண்ணை துருக்கி தலைமைக்கோர்ட்டில் ஆஜர்செய்யும்படி உத்திரவுபெற்ற சில சிப்பாய்கள் அவளை உத்திரவுப்படி நடக்க வற்புறுத்திக்கொண்டிருந்தனர். அதே சமயம் அவர்கள் வீட்டுவாசலில் இரட்டைக்குதிரை பூட்டிய ஓர் அரசாங்க வண்டி வந்து நின்றது. அதிலிருந்து இறங்கியது யார்? அதைக்காண சகலரும் பிரமித்துப்போயினர். ஏன்? அவர்தான் வீரர் கமால்பாஷா. அவர் தானே அங்கு நேரில்வரவேண்டிய காரணம் என்ன?

அங்கு கூடியிருந்த சிப்பாய்களைப் போய்விடும்படி உத்திரவிட்டார் கமால். பின் அவ்வழகியைப்பார்த்துக் கூறியதாவது “பெண்ணே! துருக்கி தேசம் உன்னால் கீர்த்தியையும், அபகீர்த்தியையும் அடையமுடியும். ஆயினும் உன் தாய் நாட்டுக்குக்கீர்த்தியை உண்டாக்குவதே உன்கடமை. நீ ஒரு பெண். உன்னின்று வீரர்கள் உதிக்கவேண்டும்- குடும்பம் செழிக்கவேண்டும். அங்ஙனமிருக்க நீ அழகுப்பொம்மையைப்போல் அன்னியர் எல்லோரும் பார்த்து இச்சையுறும் கருவியாகக் கூடாது. அழகுப்போட்டிக்கு நீ போவது தகாது. உன் அழகை உன் குலத்துக்கு ஒளியாகவும், உன் காதலனுக்கு அமிர்தமாகவும் ஆக்கிக்கொள். உன் காதலனை மணந்து வீட்டிலேயே உத்தமியாயிரு” என்று உபதேசித்து 700 பவுன் சன்மானமும் அளித்தார்.

---

(N. B) சித்தனுக்கு கடிதம் எழுதும் அன்பர்கள் தயவு செய்து தங்கள் சந்தா நம்பரைத் தவறாமல் எழுத வேண்டும். நம்பர் குறிக்கப்படாத கடிதங்கள் கவனிக்கப் படமாட்டாது.

# முடியிழந்த அபிசீனிய மன்னர்.



ஹெயிலி செலாஸி.

## அபிசீனியாவின் வீழ்ச்சி.

அபிசீனியா நில வளமும், இயற்கையழகும் ஒருங்கே பெற்ற மலைப்பிரதேசம். பல நூற்றாண்டுகளாக கருப்பு மனிதர் ஆட்சியிலேயே இருந்துவருகிறது. இந்நாட்டு மக்கள் திடகாத்திரமும், பிடிவாத குணமும் ஒருங்கே பெற்றவர்கள். தற்கால நவீன யுத்த தளவாடங்கள் ஒன்றுமே இல்லாதவர்கள். இதன் அரசர் ஹெயிலி செலாஸி நெறி தவறு நேர்மையாளர். தன்னம்பிக்கை மிக்கார். உயிரைக் காட்டிலும் மானத்தைப் பெரிதும் ஓம்புபர்.

இத்தாலியின் சர்வாதிகாரியான முஸோலினியினல் முன்னெச்சரிக்கையில்லாது தாக்கப்பட்டுத், தொடுத்தபோர் பல மாதங்கள் நடந்தது. நவீன யுத்த தளவாடங்களற்ற அபிசீனியரும் மிக்க வீராவேசத்துடன் போர் புரிந்தனர். என் செய்தும் யாது பயன்? இத்தாலியரின் அட்டூழியங்கள், வெடிகுண்டு, விஷப்புகைப் பிரயோகம்முதலியன அவர்களை சிதறடித்தோடல்லாமல் எதிரிகள் தலைநகரையும் கைப்பற்ற யத்தனிக்கையில், அபிசீனிய மன்னர் தம் குடும்பத்தினருடன் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார்.

சர்வதேச சங்கத்தை நம்பி வெளியேறிய அரசர் பெரிதும் ஏமாற்றம் அடைந்துவிட்டார். வெள்ளை நாட்டினர் ஒற்றுமையாகக் கையை விரித்துவிட்டனர்.

(முன்பக்கம் இருப்பது அபிசீனிய சக்ரவர்த்தியின் படம்.)

# பழனி நகரசபை.

## புதிய தலைவர்.

இவ்வூர் (மாஜி) நகர சபைத்தலைவர் ஸ்ரீமான் ப. பெருமாள் செட்டியார் சென்ற மார்தம் திடீரென்று காலமானதை முன்னிட்டு ஷை தலைவர் ஸ்தானத்துக்கு ஜனாப் வே. சி. காதர்மைதீன் ராவுத்தர் அவர்கள் சென்ற 2-7-36-ல் நடந்த ஸ்பெஷல் மீட்டிங்கில் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது இந்நகர வாசிகளின் அதிர்ஷ்டமேயாகும். இவர் சென்ற சுமார் 10 வருடகாலமாக பொதுஜன சேவையிலிறங்கித் தன் கடமையை நிறைவேற்றிவருவது கண்கூடு. மேலும் இவர் சென்ற 5 ஆண்டுகளுக்கு முன்பே இந்நகர சபைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அரிய ஊழியம் புரிந்துளார். எனவே ஸ்தலஸ்தாபன நிர்வாக ஞானமும், சீர்திருத்த அவாவும், போதிய ஆற்றலும், செல்வாக்கும் ஒருங்கே நிரம்பியுள்ள இவர் காலத்தில் கல்வி, சுகாதாரம், பொதுஜன சௌகரியம் முதலியன நன்கு அபிவிருத்தி அடைந்து, நகரம் முன்னேற்றகரமாய் விளங்குமென்றும், ஆரம்ப ஆசிரியர்களின் குறைகள் நீக்கப்படுமென்றும், அவர்களில் சிலர் ஏற்கனவே வாங்கிவந்த சம்பளம் குறைந்துபோன காரணமாக வறுமைப்பட்டு வருந்துவதை இவர் அகற்றுவாரெனவும் நம்புகிறோம். ஆசிரியர்.


# 'அறிவு'

(ஓர் அறிவியல் மாத வெளியீடு)

பாட்டுகள், படங்கள், கதைகள், விஞ்ஞான ஆராய்ச்சிகள் முதலிய பல அரிய விஷயங்கள் நிறைந்தது.

வருட சந்தா { உள் நாடு ரூ. 1-0-0.
வெளி நாடு ரூ. 1-8-0.

மானேஜர், "அறிவு"
சாத்தன்குளம், திருநெல்வேலி.




# "கவியின் எண்ணம்".

(ஓர் சிறு கதை.)

(கோவை, திரு. சி. கு. நாராயணசாமி முதலியார்.)

அன்று சரத்காலப் பௌர்ணமி நாள். வெண்மதியாகிய சந்திரன் பரந்த தனது பதினாறுகலைகளையும் பரக்கவிரித்து உயர்ந்த வானமண்டலத்தில் விரிஜோதியுடன் விளங்கிக்கொண்டிருந்தான். அவ்வினிய ஒளியின் அரிய காட்சி உயர்ந்த வெள்ளியை நீருருக்கி நிலமெங்கும் வார்த்தாப்போல் வெண்மையாக இருந்தது. அப்பொழுது படைப்புக்கடவுளாகிய பிரமன், தனது தியானநிலை கலைந்து சிறிது கண் திறந்து, 'எனது படைப்பில் மனிதனை மிகவும் உயர்ந்தவனும், மிகவும் அழகுடையவனும் ஆவன் என்பது எனது கருத்து; நான் கூறியதில் அறியாமையும், ஐயமும் இருப்பதாகத்தோன்றவில்லை' என்று தன்னுள் கூறிக்கொண்டனன். அதுசமயம் அங்குள்ள அழகிய மலர்த்தடாகத்தில் செந்தாமரை எழில்பெற விரிந்து அந்தமிகு மந்தமாருதத்துடன் கலந்து இனிய மணத்தை எங்கும் வீசிக்கொண்டிருந்தது. செந்தாமரைக்கு நிகரானதும், அழகுடையதும், மிருதுத்தன்மைவாய்ந்ததுமான பிறிதொருபொருள் உலகத்தில் இருப்பதாகத்தோன்றவில்லை என்று மேலும் நான்முகன் தன்னுள் கூறிக்கொண்டான்.

சிறிதுநேரம் சென்றபின் வேதா மீண்டும் தன் மலர்வாய் திறந்து மலர்களில் தாமரையை உயர்வாகக்கருதி நான் சிருஷ்டித்ததுபோல் மனிதர்களிலும், அதிலும் பேரழகு உடைய பெண்ணொருத்தியை ஏன் நான் சிருஷ்டிக்கக் கூடாது? சிருஷ்டிக்க இயலும். இதோ! சிருஷ்டிக்கிறேன் பார். நான் சிருஷ்டிக்கப்படும் அந்த நவ யுவதியை, லாவண்ய நிதியைக் கண்டாரெவரும் பெரிதும் அதிசயித்து அகமிக மகிழ்வர் என்று கூறி, அத்தடாகத்திலுள்ள செந்தாமரை

நோக்கி 'கமலா! நீ உன் மலர் உருவத்தை விடுத்து மானிட உருவில் பெண் வடிவில் பேரழகு பெற்று எனது திருமுன்னே வருவாயாக' என்று வாய்மொழிந்தனன்.

மலரவன் அங்ஙனம் வாய் மொழிந்ததும், அச்சரோவரத்தின் தெளிந்த நீர் சலசலவென்ற ஓசையுடன் அசையத் தொடங்கிற்று. அதில் 2 வெண்ணிற அன்னப் பக்ஷிகள் மிகவும் ஒயிலாக மிதந்தவண்ணம் தங்களது இனிய குரலில் அழகாகப் பாடிக்கொண்டிருந்தன.

இரவு முறையாக மூன்றாம் சாமத்தைக் கடந்தது. வெண்மதியும் தனது கதிர்களைச் சுருக்கிக்கொண்டு கீழ்த்திசையில்மறைந்தான். அதுசமயம் மெல்லிய பூங்கொடிகளும் பசிய இளந் தளிர்களையுடைய கொம்புகளும் அருகிலிருந்த தருக்களை நெருங்கி அவைகளை ஆசையுடன் ஆலிங்கனம் செய்துகொண்டு மெல்லிய காற்றுக்கு ஒயிலாக அசைந்து கொண்டு இருந்தன. அவைகளின்மீது வீற்றிருந்த பறவையினங்கள், நித்திரை நீங்கித் தங்களது இனிய குரல்களால் மதுரத்தொனிகளை மக்களது செவிகட்கு விருந்தாட்டின.

உலகமனைத்தும் மற்றொரு மோகனாஸ்திரத்தால் கட்டுண்டதுபோல் யாதோர் அரவமுமின்றி நிச்சப்தமாயிருந்தது. அப்பொழுது அத்தாமரை, பிரமனது கட்டளைப்படி பெண்ணுருத்தாங்கி மயிற்சாயலுடன் அன்னநடை நடந்து ஒயிலாக நான்முகனெதிரே வந்துநின்றது. அத்திருவுருவை, தெய்வ வடிவத்தை அயன் கண்டு அதிசயம் மிகவடைந்து, மெய் மறந்து பரவசமுற்றான்.

பின்னர், நான்முகன் ஒருவாறு தெளிவடைந்து, அம்மாதர் மனோன்மணியைப்பார்த்து 'பெண்ணமுதே! நீ இதுவரையிலும் மலர்த்தடாகத்தில் அழகிய செந்தாமரையாக மிக மிருதுத் தன்மையுடன் இருந்தனை. இனிமேல் நீ மெய்யறிவுடைய புலவர் நாவிலும், நினைவிலும் இனிது வீற்றிருக்கக் கடவாய்' என்றனன்.

குளிர்ந்த காலைப்பொழுதில் அங்கு வீசிய இனிய தென்றலானது தேன் துளிக்கும் புதிய மலர்களில் படிந்து [illegible] அன்புடன் தழுவி ஆலிங்கனம் [illegible] எழில் மிகுந்த இளமையைப்



பற்றி அந்தரங்கமாக அவைகளுடன் சம்பாஷிப்பது போலவும் இருந்தது.

வேதன் விளம்பிய அவ்வித்தக மொழியைக் கேட்ட புத்தமுதனைய அப்பெண்கொடி 'இறைவா! தாங்கள் குறித்தவிடம் எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. நான் வசிப்பதற்குத் தகுதியான இடத்தைத் தாங்கள் நிர்ணயிக்கின்ற வரையிலும் நான் தங்கள் ஆணைக்கடங்கி நடந்து வருகிறேன். நான் மலர்த்தடாகத்தில் அழகிய தாமரை மலராக மலர்ந்து அத்தடாகத்தை அலங்கரித்துக்கொண்டு இருந்தபோது அத்தடாகத்தில் மோதும் சிற்றலைகளுக்குக் கூட நான் பயந்து மெலிவேன். அவ்வுண்மை தங்கள் சித்தத்திற்குத் தெரியும். இப்போது நான் தங்கள் கட்டளைப்படி பெண்ணுருப் பெற்றிருக்கிறேன். எனது தேகமும் மனமும் மெல்லிய மலரைப்போலவே மிருதுத் தன்மையைப் பெற்று இருக்கின்றது. நான் பூமியில் தோன்றியதுமுதல் எனது தேகம், மனம், பிராணன் ஆகியவைகளுக்கு ஓர் நடுக்கம் உண்டாயிருக்கிறது. பிரபுவே! எனக்கு அபயமளித்துக் காத்தருள்க'.

அவைகளைக்கேட்ட தாமரைத்தவிசனன் களங்கமென்பது இவலையுமின்றி 'நீலமயமாக விளங்கும் ஆகாயத்தை இருநான்கு விழிகளாலும் கூர்ந்து நோக்கினன். அதுசமயம் அவருடைய நான்கு நெற்றிகளிலும் ரேகைகள் சிறுசிறு மடிப்புகளாகத் தோன்றி லலாடங்களை அழகுபடுத்திக் கொண்டிருந்தன. நான்முகன் தட்டெனத்தனது மேற்பார்வையைத் தளர்த்தித் தன்னெதிரே நின்றுள்ள கமலத்தை நோக்கி 'குழந்தாய்! நீ மனமகிழ்வோடு மலைகளின் சிகரங்களில் வசிக்க விரும்புகின்றனையா?' அங்கு வீடு அமைத்துத் தருகின்றேன்' எனக்கூறினன்.

சிருஷ்டிகர்த்தா ஒரு பெரிய கலைஞன். அவனுடைய ஆனந்தக் கனவுதான் இப்பிரபஞ்சம். அதன் அந்தரங்கமும், தத்துவமும் வேறு. அது இன்பத்தின் விளைவு. அவனுடைய அம்சத்தின் சிறு துளிதான் கவிஞன். அவன்தான் இரண்டாம் பிரமன்; கண்கூடாகக் காணக்கூடிய பிரமனும் அவனே.

கமலம்:— 'ஐயனே! வானளாவ வளர்ந்தோங்கிய அச் சிகரங்களில் பனிப்படலம் உறைதலால் குளிர் மிகுதியாய் இருக்கும். மிகவும் மென்மையான எனது தேகம் அச்சீதளத்தைத் தாங்கும் சக்தியைப் பெற்றதாயில்லை'.

பிரமன்:— 'தண்ணிய சோலைகளும், மலர்க்காவும் சூழ்ந்த இனிய தடாக மத்தியில் அழகியதோர் அரண்மனையை ஆக்கித்தருகின்றேன். அதிலேனும் வசிக்கின்றனையா'?

கமலம்:— 'பிரபு! தண்ணீருக்கும் எனக்கும் நெருங்கிய பழக்கமுண்டு. எனினும், அங்கு பல்வேறு விகடமான உருவங்களையுடைய ஜீவ ஜந்துக்கள் வசிக்கின்றன. அவைகளது கோர கிருத்தியங்கள் எனது மிருது மனத்திற்குச்சஞ்சலத்தை உண்டாக்கும். ஆனதால் நான் அங்கு வசிப்பதற்கும் விருப்பமற்றவளாக இருக்கிறேன்'.

பிரமன்:— 'சந்தடியற்ற பேராரண்யத்தில் நீ வசிப்பதற்கு ஒரு நூதன மாளிகை மனோகரமானதாய் நிர்மாணித்துத் தருகின்றேன். நீ அங்கு தங்கி இருக்கின்றனையா?'

கமலம்:— 'ஐயனே! அவ்விடம் வேண்டவே வேண்டாம். அவ்வாரண்யத்தில் கொடிய வன விலங்குகளும், கொடுமை மிக்க வேடுவரும் மிகுதி. மேலும் பயங்கர ஸ்தானம். இரவு நேரங்களில் மிருகங்களின் ஆரவாரம் அதிகமாயிருக்கும். நான் மிகவும் பயத்தையடைவேன். ஆனதால் அந்த இடமும் எனக்கு வேண்டாம்'.

பிரமன்:— 'பட்டினத்துக்கு நெடுந்தொலைவிலும், காய், கனி, கிழங்குகள் மிகுதியாகக் கிடைக்கக் கூடியதும், பசிய சோலைகள், குளிர்ந்த நீர் நிலையங்கள் நிறைந்ததும், புல்வாய் மிருகங்களாகிய மானினங்கள் மிகுதியாகத் துள்ளி விளையாடித் திரிவதுமான முனிவர்கள் தவஞ்செய்கின்ற பர்ணசாலைகளுக்கருகில் அழகிய கொடிவீடொன்று கட்டித் தருகின்றேன். அதில் நீ தாராளமாக வசிக்கலாம்'.

கமலம்:— 'பிரபுவே! முனிவர் இருக்கைகளுக்கு அருகில் எனக்குத் தனியாகக் கொடிவீடு கட்டித்தருவது உசிதமன்று. நான் நவ யௌவன யுவதி. தனித்திருப்பது தகாத காரியம். முனிவர்களும் அவர்களது சிஷ்ய கூட்டங்களும் நிரம்பியவிடத்தில் பருவ மங்கையொருத்தி பயமின்றி வாழ்வதெவ்விதம்? சோலை சூழ்ந்த இடமானதால் இரவில்



பயங்கரமான இருட்டாகவிருக்கும். அவ்விடத்தில் மருந்துக்கும் மாதர் அகப்படார். ஆனதாலவ்விடத்தில் எனக்குக் கொடிவீடு வேண்டாம்'.

பிரமனுக்கு இவற்றையெல்லாம் கேட்டுச் சிந்தையனுத்துச்செய்வது இன்னதெனத் தோன்றாது திகைத்தனன். ஆழ்ந்து யோசித்தனன். மனதில் பலவித எண்ணங்கள் தோன்றி ஊசலாடின. இந்நிலையில் மார்த்தாண்டன் உருக்கி வார்த்த தங்கவடிவுபோல் பொன்னிறக் கதிர்களைத் திசை எங்கும் பரப்பிக்கொண்டு கீழ்த்திசையில் உதயமாயினன். அப்பொழுது மலர்த்தடாகத்தின் தெள்ளிய நீர், ஓர் புதிய ஒளி பெற்று காந்தியுடன் பிரகாசித்தது. அதிகாலையில் வீசிய இனிய காற்று, மரம், செடி, கொடிகளின் இலைகளில் பட்டுச்சலசலவென்ற ஓசையை உண்டாக்கிற்று. அம்மெல்லியவோசை அம்மரம், செடி கொடிகள் தம்முள் பரஸ்பரம் இன்ப சம்பாஷணை செய்வதுபோல் இருந்தது. இச்சம்பாஷணையைக்கேட்டுக் குயில்கள் தீங்குரலெடுத்துக்கூவின. மயிலினங்கள் தங்கள் அழகிய தோகைகளை விரித்தாடின. கரிய வரிவண்டுகள் தங்கள் மெல்லிய சிறகுகளை விரித்துச் சுவையான ஒருவகை ரீங்காரம் செய்தன. இதனிடையில் சிறிது தூரத்திலிருந்து வீணையின் நாதம் மதுரமான சுவரத்துடன் இருதய வீணையிற்கலந்து சமஸ்த ஜீவராசிகளையும் ஆனந்த பரவசமடையும்படி செய்தது.

மலரவன் இன்னிசை மிக்க அவ்வீணையின் இனிய ஓசைக்கு மனமுருகிக் கண்களில் ஆனந்த பாஷ்யம் சொரிய கமலத்தை நோக்கி 'கமலா! நீ முனிசிரேஷ்டராகிய வால்மீகியாருக்கு இங்கு தோன்றும்படி அழைப்பு விடுத்தனையா'? என்று வினவினன். கமலா விடை கொடாமல் மௌனமாயினள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் இராமாயண கர்த்தராகிய வான்மீகிமுனிவர் சரோவரத்தின் கரையருகில் தோன்றினர். அங்ஙனம் தோன்றிய அப்பெரியார் போதனது புதிய சிருஷ்டியில் தோன்றிய பெண் அணங்கைக் கடைக்கணித்தனர். அப்பொழுது அவர் கையிலிருந்த வீணை முன்னிலும் இனிமையான நாதத்துடன் சுவர வரிசைகளை மிகுதியாக இசைக்கத்தொடங்கிற்று. முனிவரும் அசைவற்ற சித்திரம்போல்

இருந்து தன்னெதிரே காணப்பட்ட பெண்ணுருவத்தின் பேரழகைக் கண்களால் பருகிக் கொண்டிருந்தனர். அது கண்ட திசைமுகன் மனமிகமகிழ்ந்து கமலாவைநோக்கியபடி வால்மீகியாரை விளித்து 'முனிவா! தாம் இங்குத் தோன்றியதிலிருந்து ஏதும் பேசாமல் மௌனமாயிருப்பதேன்'?

வால்மீகியார்:— 'தேவா! இப்பெண்ணுருவம் என்ன பேரழகு? அழகின் அவதாரமோ! லாவண்ய நிதியோ! மோகினிப் பெண்ணோ! கொல்லிப் பாவையோ! இன்னதுதானென்று கணித்துரைக்கும் சக்தியற்றேன். இதற்குமேல் வேறு கூறவும் இயலாதவனாகவுமிருக்கிறேன். ஏதோ ஒருவகை மயக்கம் என்னைக் கவர்ந்துகொண்டிருக்கிறது'.

இம்மொழிகளைக்கேட்ட பிரமன் முகமலர்ந்து மிக்க மகிழ்ச்சியுடன் கமலாவை விளித்து 'மாதர் மனோன்மணி! நீ சந்தோஷத்துடன் வசிப்பதற்குரிய நல்லிடமொன்றை நான் தேர்ந்துவிட்டேன். என் கவலையொழிந்தது. நீ இதுமுதல் கவிகளின் இருதய பீடத்திலும், அவர்கள் செந்நாவிலும் வசித்துவரக்கடவாய்'.

வேதாவின் விருப்பத்திற்கு மாறுகூறாது அவரது ஆணைப்படியே ஞானசிரேஷ்டர்களாகிய கவிகளின் மனோலோகத்திலும், அவர்கள் நன்னாவிலும் வசிப்பதற்குச்சம்மதிப்பதாகக் கமலா ஒப்புக்கொண்டாள்.

அன்றிரவு சந்திரன் தனது பதினாறுகலைகளையும்பரக்க விரித்து வானமண்டலத்தில் தோன்றிப்பூரண காந்தியுடன் தாவள்யமாகப் பிரகாசித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது சிருங்கார ரசமே முதன்மையாக வியாபித்து வானகங்கையின்பிரவாகத்திற்கலந்துமனோரம்மியமாகவிருந்தது. அன்பு நிறைந்ததும் களங்கமற்றதுமான கவிசிரேஷ்டராகிய வான்மீகியார் உள்ளமாகிய மனோலோகத்தில் கமலா பேரானந்தத்துடன்பிரவேசித்தாள். அவளுக்கு கவியின்மனோலோகத்தின் அற்புதங்கள் வெகுதெளிவாகத்தெரிந்தன. ஆயின், அவளது தேகம் பிரேமையின் பிரவாகத்தில் ஆழ்த்தப்பட்டு மிகவும்சீதளத்தைக்கொண்டது. அதனால் அவளது மெல்லிய மேனி விடவிடென நடுங்கத்தொடங்கிற்று.

கமலா பிரமனைநோக்கி 'சிருஷ்டியின் தலைவரே! தாங்கள் என்பொருட்டுச்செய்த பேருபகாரத்திற்கு என்றும் தங்க



ளுக்கு மறவாநன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். பிரபோ! கவியின் மனோலோகத்தில் காணும் சில அற்புதக் காட்சிகள் என்னைப் பெரிதும் வியக்கச் செய்கின்றன. அவைகள்:— 'மலையின் சிகரங்கள் கருமேகங்களால் சூழப்பட்டனவும், மிகுதியான வெள்ளப்பெருக்குகள் ஜீவர்களை பயத்தினால் நடுங்கச்செய்கின்றனவும், பிரசண்டமாருதங்கள் பேராரண்யங்களைப் பேதிக்கக்கூடியனவும், மலையின் குகைகளுள் காடாந்தகாரம் நிரம்பப் பெற்றதுமானவைகள்'. இவைகளால் எனக்கேதேனும் ஏதம் விளையுமானால் நான் அவற்றினின்றும் தப்புவதெங்ஙனம்? என்பது மட்டும் எனக்கு விளங்கவில்லை'.

நான்முகன்:— நாயகமணி! நீ இவைகளுக்காக அஞ்ச வேண்டுவதில்லை. என்னால் சிருஷ்டிக்கப்பட்ட உனக்கு அவைகளை நிவர்த்திக்கக்கூடிய அரும் பெரும் சக்திகள் இயல்பாகவே உன்னில் அமைந்திருக்கின்றன. மேற்கூறிய சம்பவங்கள் மிகைப்படும்போது நீ செய்யவேண்டுவன சில உண்டு. அவை:— கவிகளின் மனோலோகங்களின் சிகரங்களில் படிகின்ற மேக படலங்களை உன்னுடைய வல்லமையைக்கொண்டு மலய மாருதத்தை வீசிக்கலைத்துவிடுவது; வெள்ளத்தினாலுண்டாகும் பயங்கர ஜல வேகத்தை மகிமைமிக்க உனது திருக்காதுகளின் மகரகுண்டலங்களால் வற்றச்செய்வது; பெருங்காடுகளை நிர்மூலப்படுத்தும் பிரசண்ட மாருதங்களை உனது சாகஸசமர்த்துக்களால் சாந்தப்படுத்துவது; பேரிருள் நிரம்பிய மலையின் குகையினுள் உனது புன்னகையின் பேரொளியைப் புகவிடுத்து இருட்டை நீக்குவதும் என்பனவாம்'.

கலாவதியாகிய கமலா அயனின் ஆலோசனைப்படியே செய்வதாக வாக்களித்தாள்.

இவற்றையெல்லாம் அருகிலிருந்து கேட்ட கவீச்சுரர் மிகவும் வியந்து மகிழ்ந்து, பிரமனை வாழ்த்தி பிரபுவே! நீர் சிருஷ்டித்தொழிலில் வல்லவர் என்று மனமாரக்கூறிக் கமலாவுடன் தமது ஆச்சிரமம் நோக்கிச் சென்றனர்.

# தமிழ் பாஷையின் தோற்றம்.

(A. G. கோமதிநாதன் அம்மாள்.)

அகிலஇந்திய பெண்கள் கல்விச்சங்கம் ஸ்டாண்டிங்கமிட்டி மெம்பர்.

---

உலகின்கண்ணே மக்கள் கூடிவாழ வேண்டியவராதலின் அவர்கள் அடிக்கடி தங்கள்தங்கள் கருத்துக்களை ஒருவர்க்கொருவர் வெளியிட்டுக்கொள்ள ஆங்காங்கு ஆடவர்களும் மாதர்களும் சபைகூட்டுவது அவசியமாயிற்று. ஆகவே அவர்கள் கை வாய் முதலிய அவயவங்களால் பலவித சைகைகள் செய்துகாட்டித் தங்கள் கருத்துக்களை வெளியிடுவாராயினர். இத்தகைய கருத்துவெளியீட்டுக் கருவியாகிய சைகையை இயற்கைப்பாஷை என்பர் சிலர். இவ்வியற்கைப்பாஷை முதலிற் காட்சியளவில் நின்று பின்னர் கேள்வியளவிலும் பரவிற்று. அஃதாவது சில ஒலிகளும் ஒலிக்கூட்டங்களும் கருத்து வெளிப்பாட்டிற்குக் கருவியாக அச்சைகைகளுடன் கூடின.

அவை தாம் பேர் வகையாலும், சுவை வகையாலும், அறிகுறி வகையாலும் எழுந்தனவாம். பேச்சு நிலைக்கு வாராது சைகை நிலையில் நின்றகாலத்திலெல்லாம் தமிழ் மக்கள் புலி முதலிய கொடிய வன விலங்குகளைக் கொன்று வேட்டைத்தொழில் புரிந்து வந்தனர். இவ்வேட்டைத் தொழிலைச் செவ்வனே நடாத்துவதற்கு மிருகங்களின் ஒலிகளையுற்றுக்கேட்டு நன்குணர்ந்து அவைபோலத் தாமும் கத்தி அவைகளை ஏமாற்றித் தம் வலைப்படுத்தினர். வேட்டையாடுதலைப் பயன் கருதியதோர் தொழிலாகவே முற்றும் மதித்தல் நேர்மையன்று. இஃது ஆதி மக்களால் விளையாட்டுத்தொழிலாகவும் கருதப்பட்டு வந்தது. இக்காலத்தும் இது பலர்க்குப் பிரீதியானதோர் விளையாட்டாம். இவ்வாறு ஆதித் தமிழ்மக்கள் வேட்டையாடினதால் பலவகைப்பட்ட





மிருகங்களின் ஒலிவேறுபாடுகளையும் நன்குணர்ந்து தமக்குள்ளே அவற்றை அறிந்துகொள்ளுமாறு அவ்வொலிகளின்றுங் குறிப்பு மொழிகள் பல வகுத்தனர். ஒன்றுபிறிதுபோல் கத்திய ஒலியினின்றும் உற்பத்தியான சொற்களைப் போன்றவகையால் எழுந்தனவெனக. மக்கள் சுவையுடையராதலின் அவற்றிற்குத்தகுந்த மெய்ப்பாடுகள் விளைக்கத் தக்க பொருள்கள் எதிர்ப்பட்டனவாயின் சில குறிப்புச் சொற்கள் தாமாகக் கூறுவராயினர். வெறுப்புச்சுவையிற் (சீ) என்றும், வெகுளிச்சுவையிற் (போ) என்றும், உவகைச் சுவையில் (வா) என்றும் கூறப்படும் சொற்களைக் காண்க. 'ஐ' என்பது வியப்பினாலும், 'ஓ' என்பது அவலத்தினாலும், 'ஐயோ' என்பது அச்சத்தினாலும் எழுந்தன.

அறிகுறி வகையால் எழுந்த பகுதிகள் மிக சிறப்புடையவையாம். இவைகள் நாவின் சைகை என்பதனடியாக முதலிற்பிறந்தன. இஃது அடிக்கடி பல் உதடு முதலிய வாயின் பகுதிகளைச் சுட்டுதற்குரிய கைச்சைகைகளைக் கவனிக்குமாறு கூறுங்கூச்சலோடு தொடங்கும். வேண்டுமென்று எழாது அனுதாபத்தினால் உதவிசெய்ய எழுந்த நாவின் சைகை இயற்கையாகவே கைச்சைகையைப் பின்பற்றிவரும். அதன்மேல் கைச்சைகை மிகையென்று சிறிதுசிறிதாகக் கைவிடப்படும். உதாரணமாக கவனிக்குமாறு கூவிய கூச்சல் 'ஆ' என்ற உருவங்கொண்டதாக வைத்துக் கொள்வோம். அப்படியானால் பல்லைக்குறிக்கும் நாவின் சைகை 'அடா' என்ற உருவங்கொள்ளும். இவ்வாறே தன்னைக் கவனிக்குமாறு பிறரை விளித்த விளி 'ஏ' என்று இருந்ததாயின் பல்லைக்குறிக்கும் நாவின் சைகை 'ஏட' என்றிருக்கும். ஈண்டுக் கூறியதற்கிணங்கவே தமிழ் மொழியின் கண்ணே 'அடா', 'ஏட' என்ற இரண்டு சொற்களும் பிறரை விளித்தற்குப் பெரிதும் பயன்படுகின்றன.

சில தன்மை முன்னிலைப்பகுதிகள் அறிகுறிவகையால் எழுந்திருக்கலாம் என்று எண்ணுதற்கிடமுண்டு. அது தானும் உச்சரிக்க சுலபமாகவும் எழுத்துகளிற்பிரதானமாகவுமுள்ள 'ம' 'ப' என்ற எழுத்துக்களின் சம்பந்தம் உடையதாம். இவ்விரண்டெழுத்துக்களும் குழந்தைகளால் முதன்முதலாக உச்சரிக்கப்படுவனவாம், இவ்விரண்டும் குழந்தை

கட்கு அருகிலிருந்து உதவிசெய்யும் தாய்தந்தையரைக் குறிப்பிடுஞ்சொற்களாகிய ‘அம்மா’ ‘அப்பா’ என்றன பிறப்பதற்குமுதற்கருவியாய்நிற்பன. தாயைக்குறிக்கும்‘அம்மா’ என்றசொல்லின் கண்ணும் மகரம் உபயோகப்படுதலை உற்றுநோக்கின் தாய் குழந்தைக்கு தன்னவளாயினள். இதைக் கவனிக்குமிடத்து தந்தை சிறிது தன்னின்றும் விலகினவனாகமதிக்கப்படுவதற்கு அறிகுறியாகப் பகார சப்தத்தினால் ‘அப்பா’ என்றழைக்கப் படுகின்றனன். தமிழ் பாஷையின் தோற்றவிஷயமாக யாம் மேற்கூறிப் போந்தனவனைத்தும் எவ்வாறு கருதப்படினும் படுக. கருத்துக்கள் தன் முயற்சியாலெனினும் ஒலிகளின் சம்பந்தமாகவே வெளிப்படுகின்றன. இயல்பினின்றுமே பாஷைகள் உண்டாதலியலுமென்பது யாவரும் மறுக்கமுடியாததோர் பாஷை நூலுண்மை. இவ்வுண்மையையொட்டியே தமிழ் பாஷையின் தோற்றமும் ஏற்பட்டிருத்தல் மிகவும் கவனிக்கற்பாலதே.

ஈதிவ்வாறிருக்க, தமிழ் நூலாசிரியர் பலரும், இக்காலத்திலும் ஆங்கில நூற்பயிற்சி இல்லாத நண்பருட்சிலரும், தமிழ்மொழியும் வடமொழியும் தேவ பாஷைகளென்றும், இவ்விரண்டும் முறையே அகத்தியனார்க்கும், பாணினியார்க்கும் சிவபெருமானால் உபதேசிக்கப் பட்டனவென்றும் கூறுநிற்பர். ஆதியில் தமிழ்நூல் அகத்தியர்க்குணர்த்திய மாதொருபாகனை வழுத்துதும்எனவும், தழற்புரை நிழற்கடவுடந்த தமிழ் எனவும், வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளியதற்கிணையாத் தொடர்புடைய தென்மொழியைத் தொடுகடல் சூழ் வரைப்பதனிற் குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப்பாகர் எனவும், இருமொழிக்கும் கண்ணுதலார் முதற்குள் எனவும் முந்தையோர் கூறியிருத்தலையும் காண்க.

யாம் மேற்கூறிப்போந்தவாறு மக்களாக்கப்பொருளாய் விளைந்த தமிழ் பாஷையானது தமிழ்மக்கள் யாவருக்கும் எவ்வாறுஒருங்கே விளங்குவதாயிற்று என்றதோர் ஆசங்கை இடையில் எழுதல் இயல்பே. இது வெகு சுலபமாக விடுக்கப்படும். யாவருக்கும் விளங்கத்தக்க சைகைகள் இடைநின்று சொற்களை ஐயமுண்டான காலங்களில் விளக்கினதால் தமிழ்ப் பாஷையின் சொற்பொருளுணர்ச்சி தமிழ் மக்கள் யாவருக்கும்உண்டாகித் தமக்குள்ளே அறிந்துகொண்டனர்.

# நாமகரணம்.

(ஸ்கேலிடன்)

அப்போது ரம்மியமான மாலைநேரம். ஊரிலிருந்து அழையா விருந்தினர் பலரும், அழைப்பு விருந்தினர் சிலரும், இன்னும் உள்ளூர் உறவினர் அநேகரும் எங்கள் வீட்டில் குடியேறி இருந்தமையால் மத்தியான மகத்தான மகாஜன விருந்துக்குப்பின் இடைவேளைச் சிற்றுண்டியும் இனிது முடிந்தது. பின்னர் மலையாளத்தில் கூறுவதுபோன்று எல்லோரும் முறுக்கானில் முனைந்து வாசலெங்கும் செந்நீர் தெளித்துவிட்டனர். இத்தகைய வைபவங்கட்கிடையே என் தங்கை (சித்திமகள்) பர்வததேவி ‘அண்ணே! அண்ணே! ஓர் நல்ல சங்கதி. வெகுநாளாய் கேட்கவேண்டுமென்ற ஆவல். அதற்கிப்போதுதான் தருணம் வாய்த்தது’ என்று பரபரப்புடன் ஓடிவரவே நான் திடுக்கிட்டு ‘என்னம்மா அது? சொல் பார்ப்போம்’ என்றேன்.

‘அண்ணே! நம் மருமகப் பிள்ளைக்கு என்ன பெயர் வைக்கப்போகிறீர்கள்? இதோ மதனியும் வருகிறார்கள்; கேட்டுவிட்டால் போகிறது’ என்றாள் பர்வததேவி. அவ்வாறே அவளும் வந்து சேர்ந்தாள். உடனே அவளிடம் விஷயத்தைக் கூறியதும், அவள் ‘என்ன பெயர் வைப்பது? நீதான் சொல்லேண்டியம்மா’ என்று பாரத்தை பர்வததேவி மேல் போட்டாள். அதற்குப் பர்வததேவி குதூகலத்துடன் ‘எங்க பெரியப்பா பேர்தான் வைக்கவேண்டும். அதாவது ‘சிவராமகிருஷ்ணசாமிபிள்ளை’ என்று. ‘வேறெந்தப்பெயரும் பக்கத்தில்கூட துதிக்கக்கூடாது’ என்று கூறிக்கொண்டே ‘ஆ! எங்க பெரியப்பா இதுசமயம் இல்லாதுபோய்விட்டாரே’ என்று கண்ணையும் மூக்கையும் வடிக்க ஆரம்பித்துவிட்டாள்.

‘ஐயோ! அதென்னபெயர்? இக்காலத்துக்குத் தக்கபடி புத்தம் புதிதாய் இருக்கவேண்டும். என்னவோ எனக்குப் பழய காலத்துப் பெயர்கள் சுத்தமாய்ப் பிடிக்கவேயில்லை. அதிலும் இந்த சாமியும், பூதமும் யாருக்கு வேண்டும்’

என்றாள் அருமை நாயகி (ஆகாயத்திலிருந்து குதித்தவளல்லவா!) 'அப்படியானால் 'கல், மரம், காடு, முள்' என்று வைப்போமா? வெள்ளைக்காரர்கள் எல்லாம் இம்மாதிரிதான் வைத்துக்கொள்கிறார்கள்' என்று நைசாகக் கிண்டிப்பார்த்தேன்.'

'ஆ! இதென்ன கொடுமை! என் கண்ணான கண்ணுக்கு 'கல், மண்' என்ற பெயர்களா? வெகு அழகு! வெகுநேர்த்தி! வெள்ளைக்காரனைப் பாருங்கள், பெயரின் லட்சணத்தைப் பாருங்கள். ஆபாசம்; ஆபாசம்' என்று உதறிவிட்டாள். பர்வதாதேவியும் அவ்வாறே ஒத்தாதினாள். பின்னர் நான் சற்று யோசித்துவிட்டு, 'ஏன்? நமது தேசியத்தலைவர்களின் பெயர்களில், அதாவது 'காந்தி, நேரு, படேல், குப்தா, தாஸ்' இவைகளில் ஏதாவதோர் பெயரை வைப்போமா''? என்று ஆரம்பித்தேன்.

'வேண்டாம்; வேண்டாம். காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தவாள் என்று ஏதாவது விவகாரம் வரும். அப்படியொன்றும் கூடாது' என்று ஒரே அடியாய் இருவரும் அடித்துவிட்டார்கள்.

'நல்லது; இன்னொரு தினுசு உண்டு. அதாவது சுயமரியாதைக்காரர்கள் ஆரம்பித்திருப்பதுபோல் 'ரஷ்யா, ஜப்பான், சமதர்மம், விடுதலை, லெனின்' என்று ஒன்றை வைத்துவிட்டாலென்ன' என்று விளம்பினேன்.

'உங்கள் வீட்டில் பிறந்து எங்கேயோ கண்ணுக்கும், மூக்குக்கும் எட்டாத உதவாக்கறை பெயர்களை எல்லாம் சுமக்கவேண்டுமென்று என் தங்கத்துக்குத் தலைவிதியா? என்னே மதியீனம்! என்னே பெயர்களின் அழகு!' என்று பகிஷ்காரம் செய்யலானாள். பர்வதா தேவியும், பக்கத்தில் இருந்த அத்தையரசியும், மற்ற சித்திகளும், பெண்டுகளும் கைகொட்டி நகைக்கலானார்கள். பின்பு எனக்குக் கொஞ்சம் உஷ்ணமுண்டாகவே 'நீங்கள் விளையாடுகிறீர்களா என்ன? முன்னோர்நாமதேயங்களும்பிடிக்கவில்லை;மேனாட்டு தினுசும் கூடாதென்கிறீர்கள். மேலும் இந்நாட்டுத் தலைவர்கள், தேசபக்தர்கள் பெயர்களும், சீர்திருத்தவாதிகளான சு. ம. பேர்வழிகள் பெயர்களும், வேண்டாமென்றால் வேறென்ன செய்வது? நீங்கள் [illegible] ஆகாயத்திலிருந்து குதித்தவர்கள் போல் பேசுகிறீர்களே. இனி உங்களிஷ்டம்போல் நடங்கள்.



என்னைத் தொந்தரவு செய்யவேண்டாம்' என்று ஒரு போடு போட்டேன். அதன்பேரில் சற்று மௌனம் தாண்டவமாடி சமாதானமும் நிலவியது.

'என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? என் அருமை ரத்னத்துக்கு நாகரீகமான, இனிய, அர்த்தபுஷ்டியுள்ள, யாவரும் விரும்பத்தக்க, முன்னேற்றகரமான ஓர் நூதன நாமம் உங்களால் பார்க்கமுடியாவிட்டால் அதுவும் எங்கள் அதிர்ஷ்டந்தான்' என்ற மெட்டில் பல்லவி மறுபடியும் கிளம்பிற்று.

'அப்படியானால் 'லட்டு, ஜிலேபி, பன்னீர், ஷர்பத், மின்சாரம், கப்பல், மோட்டார், ரயில், ஆகாயவிமானம், சினிமா, ரேடியோ' இவைகளில் ஏதாவது ஒன்று பிடிக்குமா? இவைகளெல்லாம் நீ நினைக்கிறபடி முன்னேற்றத்திலும், நாகரீகத்திலும் சிறந்தவை என்பதில் சந்தேகம் வேண்டாம்' என்று மூட்டையை அவிழ்த்தேன்.

'ஏது, ஏது; கேலி செய்கிறீர்கள் போலிருக்கு. இன்னும் சற்றுநேரத்தில் பைத்தியக்காரிப் பட்டங்கூட கிடைத்தாலும் கிடைக்கும். வேண்டாம்; வேண்டாம்; எனக்கிந்த வம்பு; எப்படியோ ஆகட்டும்' என்று பின்வாங்க ஆரம்பித்தாள். நானா விடுபவன். 'சரி; இவைகளும் பிடிக்காவிட்டால் 'தினமணி, வாரமணி, சுதேசமித்திரன், பரதேசமித்திரன், தமிழ்நாடு, தாய்நாடு, இந்து, குடி அரசு, சென்னை மெயில், ஆனந்த விகடன், அழுமூஞ்சி விகடன்' என்று ஏதாவது ஒன்றை வைத்துவிட்டால் போகிறது. இவைகள் யாவரும் விரும்பக்கூடியவை. மேலும் உலகப்பிரசித்தமான பெயர்கள். என்ன சொல்கிறீர்கள்?' என்று பிடித்துக்கொண்டேன். என்ன சொல்லியுமென்ன? சமாதானமானால்தானே. எனவே என்னென்னவோ புலம்ப ஆரம்பித்துவிட்டாள். எனது உத்தமத்தங்கையும் கடவுளை நோக்குகொண்டு இருந்தாள். ஆனால் பக்கத்திலிருந்து இந்நாடகத்தைக் கண்டு களித்தவளான எனது பெரிய சித்தி 'ஆமப்பா; குழந்தைதான்—இன்னும்—பிறக்கலை—' என்று சொன்னாள்போல் இருக்கிறது. 'அட! எழவே!' என்று நானும் கண்ணை விழித்துப் பார்க்கிறேன். அர்த்தராத்திரியில் சரியான மழை இருட்டு. ஏதோ தூக்கக்கெடுதல் என்று போர்வையை இழுத்து மூடிக்கொண்டு அப்படியே படுத்துக்கொண்டேன். சுபமஸ்து.

# ஜாதி பேதம் ஒழிக.

(புதுவை R. S. ராஜலக்ஷ்மி)

இராகம்—தேசிக தோடி. தாளம்—ஆதி.

(தாரணியிலன்பு கொண்ட—என்ற மெட்டு.)

பல்லவி.

ஜாதிமத பேதமதை தகர்த்தெறிவீரே
தகர்த்தெறிவீரே வீரத் தகைமையுள்ளோரே (ஜா)

அநுபல்லவி.

ஆதிநாளில் நம்மவர்கள்
அரைந்தில்லை மதக்கொடுமை
நீதியோ உங்களுக்கிது நீணிலத்தோரே
நீணிலத்தோரே மன நேர்மையாய் நீரே. (ஜா)

தொகையறா.

ஒரு தாய்வயிற்றினில் உதித்திட்ட மக்களில்
உயர்வு தாழ்(வு) வென்கலாமோ?
திருவாய் மலர்ந்தருளி சென்ற திருவள்ளுவரின்
திவ்ய மொழியும் பொய்யாமோ?

அநுபல்லவி எடுப்பு.

உட்கார்ந்தெழுந் தாலும் குற்றம்
உண்பதற்கும் சட்டதிட்டம்
வெட்கமிகும் கொள்கையிதை வெறுத்திடுவீரே
வெறுத்திடுவீரே பிரிவை வொழித்திடுவீரே. (ஜா)

தொகையறா.

இந்தியா தேசத்தில் ஏழைக்கோடி மக்கள்
இன்னலுறுவது தகுதியா?
தந்திரமாயவர்களை தாழ்த்தியே யொதுக்கி நாம்
தன்மை பெறுவது சம்மதியா?

அநுபல்லவி எடுப்பு.

பொதுஸ்தலத்தும் உரிமையில்லை
புகுந்திடிலோ வருகுந்தொல்லை





எதுக்கெடுத்தாலும் சொல்லை யியம்பக்கூடுமோ?
இயம்பக்கூடுமோ சமத்வம் யிருந்தால் நாடுமோ? (ஜா)

தொகையறா.

பஞ்சமர்கள், பறையர்கள், புலையர்களெனக் கூறும்
பழிப்பெயர் நீங்கி நின்று
நெஞ்சுவந்து எங்கள் சகோதரர்களெனக் கூறும் நாள்
நிலை பெற்றிடுவதென்று?

அநுபல்லவி எடுப்பு.

உத்தம அரிஜனர்கள் உயர்நிலை தானடைய
'சித்தன்' மணிதனிலே செப்பினேன் மொழி
செப்பினேன் மொழி மகிழ்
சேர்ந்தே யித் ததி. (ஜா)


தென் இந்தியா

**மோட்டார் பாடசாலை.**

(1916ல் ஸ்தாபிக்கப்பட்டது)

**3மாதத்தில் மோட்டார் ஓட்டக் கற்றுக்கொள்ளலாம்.**

மோட்டார் வண்டிகளை ஓட்டவும், மெஷின்களைக் கழற்றவும், பூட்டவும், எலக்டிரிக் வேலைகளையும், மலைப்பிரதேசங்களில் கார்களை ஓட்டவும், வேறு பல சீர்திருத்தங்களை செய்யவும், கற்றுக்கொடுத்து தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்டு லைசன்சும், பாடசாலை சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்படும். வாசிப்பு இல்லாதவர்களுக்கும் சுலபமாய் கற்றுக்கொடுக்கப்படும்.

தேர்ச்சிபெற்றால் ரூ. 35 முதல் ரு. 100 வரையிலும் பெறலாம். மோட்டார் மெக்கானிக் தமிழ் புத்தகம் 50 படம் 200 பக்கம் விலை ரூ. 2.

தபால் செலவு வேறு. விபரத்துக்கு எழுதவும்.

தென் இந்தியா மோட்டார் எஞ்ஜினீரிங் ஓர்க்ஸ்
& பாடசாலை, மயிலாப்பூர் PO. சென்னை.

கீழ்கண்ட விலாசத்திலும் கிடைக்கும்:—

மானேஜர், "சித்தன்" காரியாலயம், பழனி.

# மாதர் பகுதி.

## அடக்கத்தின் அவசியம்.

(தோழர், A. B. ஆதித்தர்.)

உலகத்தில் தோன்றிய ஒவ்வொரு ஜீவ உருவிலும் காமஉணர்ச்சி ஊடுருவி நிற்கவே செய்கின்றது. மகாத்மாக்களையும் காமம் விடுவதில்லை. ஊனுள்ளளவும் உடலுண்டு; உடலுள்ளளவும் காமமும் உண்டு.

"உலகத்தில் எந்த மனிதனிடத்தில் மனோசக்தி அதிகமாக வாய்க்கப்பெற்றுளதோ அந்த மனிதனிடத்திலும் மிருக உணர்ச்சி ஒருவகையாகப் பொருந்தி இருப்பதே வழக்கம். ஒரு மனிதனிடத்தில் ஒரு பரபரப்பான ஊக்கம் காணப்பட்டால் அங்கு பெண்களின்மீது அழுந்திய ஒரு வேட்கையும் மிகுந்திருப்பதைக் காணலாம்" என்று ரீம்பர் சரித்திர ஆசிரியர் இயம்பி இருக்கிறார்.

ஆனால் அறிஞர்கள் இந்த உணர்ச்சியை அடக்கிவிடுகிறார்கள். அதன்மூலம் அவர்கள் மனதில் பரிசுத்தம் நிலவுகிறது. மூடர்களோ தங்கள் மனதில் எழும் வேட்கையை அடக்கமுடியாமல் ஹத்துமீறிநடந்து இடர்ப்படுகின்றனர். மிருகங்கட்கும், இத்தகையவர்கட்கும் வித்யாசமே இல்லை. மனித உருக்கொண்டிருந்தும் அவர்கள் தன்னடக்கம்கொள்ளாமலிருப்பார்களானால் அவர்களை மிருகங்களென்று சொல்வதில் என்ன குற்றமிருக்கிறது?

நம் நாட்டில் பெரும்பாலும் அடக்கம், கட்டுப்பாடு, ஒழுக்கம் ஆகிய அரிய குணங்கள் பெண்மக்களுக்குத்தான் கற்பிக்கப்படுகின்றன. பெற்றோர்கள் தங்கள் ஆண் குழந்தைகளைப்பற்றி அதிகக்கவனம் செலுத்தாதபடியினால் அவர்கள் பிற்கால வாழ்வில் அடங்காக் காளைகளாகக் கெட்டலைகின்றனர். அவன் ஏதும் குற்றம் செய்தாலும் 'ஆண் பிள்ளை





தானே' என்று சொல்லி அதைக்குற்றமாகக் கருதுவதில்லை. இதே குற்றக்குணமானது இவன் வளரவளர அதுவும்வளர்ந்து இவனை மனிதவகுப்பிலிருந்து பிரித்துவிடுகின்றது.

பிள்ளைகளை ஆண்மையுடன் வளர்க்கவேண்டியதுதான். ஆனால் அவர்களிடமும் பெண்பிள்ளைகளை வளர்ப்பதில் காட்டும் ஒழுக்கம், நாணயம், கற்பு, சாந்தம் ஏற்படச்செய்யவேண்டும். பெண் பிள்ளைகளையும், ஆண் பிள்ளைகளையும் ஒழுக்கப்பயிற்சியில் வித்தியாசமாக வளர்க்கக் கூடாது. அவ்விதம் செய்வதாலேயே ஆண் வகுப்பும் ஒழுக்கத்துடன் வாழக்கூடும். பெண்களிடம் சமயசந்தர்ப்பங்களில் ஆண்மை பிரதிபலிப்பது எவ்வளவு அவசியமோ அதே மாதிரி ஆண்களிடமும் பெண்மை தோன்றச்செய்வது அவசியமாகும். ஒழுக்கத்திலிருந்து பிறழ்வதற்கு ஒரு காலமும் பெண்மை முந்திக்கொள்ளாது. ஆண்மையிடம் மீறி நிற்கும் காமம் பெண்மையிடம் அடங்கியே நிற்கும். பெண்மையும் இளமையை விரும்பும்; முந்தவும் செய்யும். அது இங்கு அவசியமில்லை.

ஆண்களிடம் பெண்மை பிரதிபலிப்பதால் அவர்களுக்கும் (காமம்) அடக்கத்துடன் வாழக்கூடுமானால் பெண்மையே உருக்கொண்ட பெண்களின் ஒழுக்கத்தைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

நம் நாட்டுப்பிரபு ஒருவர் மேனாடு படிக்கப்போந்த தமது மைந்தனுக்கு "அங்கு பெண்கள் கூட்டத்தில் பழகு; அவர்களோடு பேசு; உறவுகொண்டாடு" என்று புத்திமதி கூறி எழுதிய கடிதம் அநேகருக்குத் தெரியாமலிருக்கலாம். ஏனெனில் பெண்கள்தான் தன்னடக்கமுள்ளவர்கள்; தங்கள் காம எண்ணத்தை வெளியில் காட்டிக்கொள்ளாதவர்கள்; விருப்பத்தை நிறைவேற்ற முந்திக்கொள்ளாதவர்கள்; ஒழுக்கமுள்ளவர்கள்; அவர்கள்தான் அன்பாக நடக்கவும், இனிமையாகப்பேசவும் தெரிந்தவர்கள்; அவர்கள் மத்தியில் பழகுவதால் நன்மையே விளையக்கூடும். பெரும்பாலான ஆடவர்களைப்போல் மனம்போனபடி பேசவும், மனம்போனபடி நடக்கவுமில்லாமல் வாக்கும், மனமும் பரிசுத்தமாக—ஒழுக்கமாக இருக்கமுடியும். [இங்கு பெண்கள்கூட்டத்தில் பழகச் சொல்லியிருக்கிறதே அல்லாமல் பெண்ணிடம் தனித்துப் பழகச்சொல்லவில்லை.]

காமுகனுக்குப் பெண்ணிடம் பழக விருப்பம். ஆனால் பெண்கள் மத்தியில் பழக அவனுக்கு முடியவில்லை. ஏன்? அவனது கண்ணோட்டம் சரியாயில்லை. கருத்து பரிசுத்தமாக இல்லை. அவனுடைய கண்கள் சுறந்த இடத்தையும், மனம் பிறந்த இடத்தையும் நோக்குகின்றது. பாவம்! அவனுக்கு அதை மறக்கவும், மனதைப் பரிசுத்தவழியில் திருப்பவும் முடியவில்லை. ஆண்மையுள்ள, ஒழுக்கமுள்ள, அறிவுள்ள, உயரிய பெண்களைக்கண்டால் அவன் மனங்கூசுகிறான்; தலைகுனிகிறான்.

உண்மையில் காமத்தில் ஒருவித உபாதை தீர்வதைத் தவிர பெருமித இன்பமொன்றுமில்லை. இதற்காக ஊரில் உள்ள பெண்களை எல்லாம் எண்ணி எண்ணி மேனி அழிவதைப்போலவும் இழிவு வேறில்லை. காதல்கொண்ட ஒரே கண்மணியைக் கல்யாணம் செய்து இன்புற்று வாழ்வதற்குக் காமுகன் உணர்வுகொண்டானில்லை. அது அவனின் துர்ப்பாக்யமேயாகும்.

“எனது அன்பு மிகவும் பரிசுத்தமானது. கேவலம் மிருகங்களது இச்சைபோலல்லாமல் மாசற்றது. அவளை நானொரு தேவலோகமடந்தைஎன்று பூஜித்தேனே அல்லாது விலைமாதைப்போல் அவள் மீது மோகங்கொள்ளும் தன்மை உள்ளதல்ல எனது காதல். நான் அடிக்கடி அவளுடன் தனியே உரையாடுவது வழக்கம். உன்னத இலக்கியங்களைப் படித்து இருவரும் இன்புறுவது வழக்கம். அவளது வனப்பும், ஒளியும் எனது உள்ளத்தை மயக்கின. அவளது அழகிய முகத்தில் தோன்றும் இன்பகரமான பார்வை ஒன்றே எனக்குப் போதுமான வெகுமதி” என்று ஒரு புருஷநாயகம் புகல்கிறார். அவ்விதம் எண்ணி இன்புற காமுகனுக்குத் தெரியவில்லை. காமுகனே! உனக்கு ஐயோ!

ஸ்திரீயானவள் பலஹீனமானவள். அவள் தனித்து இருப்பது தகாது. கொடிய கயவர்களான காமாதுர ஆடவர்கள் எத்தனையோ பேர் தங்களது துர் எண்ணத்தைப் பூர்த்திசெய்துகொள்ள சந்தர்ப்பத்தை தேடியிருக்கின்றனர் இத்தகைய காலத்தில், பெண்மையே உருவெடுத்தன்ன பூங்கொடியானவள் தனி இருப்பது தகுமா?



அயோக்கியர்களின் சந்ததி விருத்தியாகாமல் தடை செய்யவேண்டும். உயர்தரக் கல்வியைக்கொடுத்து வேலையில்லாத்திண்டாட்டத்தை உண்டாக்காமல் நடுத்தரக் கல்வியைக் கொடுத்து அவரவருக்குச் சாத்தியமான தொழிலில் ஈடுபடுத்தவேண்டும். ஒழுக்கவாழ்வை மனதிலும், வெளியிலும் காட்டவேண்டும். பெண்களை எல்லாம் ஆண்மை உள்ள வீரத்தாய்மார்களாகவும் ஆக்கவேண்டும். பிறர் எதை நமக்குச்செய்ய விரும்புவோமோ அதையே நாமும் பிறருக்குச் செய்துவரவேண்டும். அறிவு நிறைந்த மக்களாக-மகாத்மாக்களாக மனிதவர்க்கத்தை உண்டாக்கவேண்டும். அந்நிலைக்குவந்தவர்கள் அடுத்தவர்களுடன் தனித்துப்பழகுவதால் கெடுதி வரப்போவதில்லை. மக்கள் மகாத்மாக்களாகச்சீர்திருந்த இல்லையாயின் மாக்களைவிட மேம்பட்டவர்கள் என்று சொல்லிக்கொள்ள முடியாது. நாம் மிருகப்பிராயத்திலேயே இருந்துகொண்டு அயலார்களுடன் தனித்து உறவாட நேருமாயின் அவசியம் கெடுதியே சம்பவிக்கும். ஆகவே ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு அறிஞராக—மகாத்மாவாக நாட்டில் தோன்றுவாராக.

சிட்னி சிமித் என்பவர் மனிதவர்க்கத்தை மூன்று வகுப்பாகப்பிரித்திருப்பதை இங்கு ஞாபகமூட்டுகிறேன். அதாவது:— ஆண், பெண், மகாத்மா.

“சுத்தமும், பிரகாசமும் பொருந்திய அநேக இரத்தினங்கள் ஆழம்பொருந்திய சமுத்திரத்தில் மறைந்துகிடப்பதுபோல், மகிமையுள்ள மகாத்மாக்கள் பெயர்களும் மனிதர் கூட்டத்தில் அவர்களின் சொரூபந்தெரியாது மறைந்திருக்கின்றன” என்பது தாமஸ்கிரே கூறிய உண்மைத்தரிசன வசனம். இச்சிறந்த வசனத்திற்கு இலக்காகும்படியாக ஒவ்வொருவரும் அடக்கத்தின் [illegible] அநுஷ்டித்து ஒழுகுவார்களாக.

மிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்

## "சித்தன்" ஏஜண்டுகள்.

P. M. R. முத்துசாமி ரெட்டியார்,
குப்பிணித்தெரு, கொளும்பு.

R. சுப்பிரமணியன்,
நியூஸ் ஏஜண்டு, சாரங்லையன், உரிகம்.

S. V. சிவப்பிரகாச முதலியார்,
எட்டியம்மன்கோயில்தெரு,
தோட்டபாளைம், வேலூர்.

T. M. ஆரோக்கியசாமி & சன்ஸ்,
புக் ஸெல்லர்ஸ் & ஸ்டேஷனர்,
மார்க்கட், உதகமண்டலம்.

கே. சுப்ரமணியம், நியூஸ் ஏஜெண்ட்,
சிவன்கோவில்வீதி, தேவகோட்டை.

———

நாகபட்டணம் நியூஸ் ஏஜென்சி,
பெரியகடைவீதி, நாகபட்டணம்.

சி. லக்ஷ்மய்யா, நியூஸ் ஏஜண்ட்,
கலாந்தர்வீதி, பெரியகாஞ்சீபுரம்.

S. சிவசுப்ரமணியபிள்ளை,
சீத்தாராம நியூஸ் மார்ட், எரேணியல்,
நெய்யூர்.

வ. வ. வெங்கட்டவரதன்,
நியூஸ் ஏஜண்ட், புதுச்சேரி.

முக்கிய நகரங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

"சித்தன்" காரியாலயம், பழனி.


## ✳ எதிரொலி. ✳

(கோயில் பூனை.)

### ஸ்பெஷல் ரயில்?

ரயில்வே உத்தியோகஸ்தர்கள் அங்கும் இங்கும் ஆடம்பரமாக பிரயாணம் செய்கிறார்கள், என்ன வீண் செலவு? ரயில்வே உத்தியோகஸ்தர் ஒருவரின் மனைவி மயிர் வெட்டி கிராப் செய்துகொள்ள 200-மைல் பிரயாணம் செய்து பம்பாய்க்குப்போக விரும்பினாராம். அதற்காக அந்த அம்மாளுக்கு ரயில்வே அதிகாரிகள் பிரத்தியேக சலூன் ஒன்று கொடுத்தார்களாம். —பம்பாய் மேயர், ஸ்ரீ மேத்தா.

(நண்பரே! தங்கள் கூற்று உண்மையாயிருக்கலாம். ஆனால் கிராப் செய்வதற்கென்றுமாத்திரம் அந்த அம்மாள் 200-மைல் போயிருக்கமாட்டார்கள். ஒருவேளை அதே சந்தர்ப்பத்தில் அங்குள்ள அவரது முக்கிய நண்பர்களல்லது உறவினர்களைக்காணச் சென்றிருக்கலாம். அப்படியிருந்தாலும் தாங்கள் இதையெல்லாமா வெளியாக்குவது—அவர் கணவர் என்ன நினைப்பார்?-பாபம்.)

### முகமூடி நிபந்தனை?

"நான் உங்கள் சமஸ்தானத்தில் வேலையேற்கவேண்டுமானால் சில நிபந்தனைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளவேண்டும். அதாவது எனது சொந்த அபிப்பிராயங்களில் நீங்கள் தலையிடக்கூடாது. முக்கியமாக என் மனைவி முகமூடி தரிக்கமாட்டாள். அதற்கு நீங்கள் ஆட்சேபிக்கக்கூடாது".

—சர் அக்பர் ஹைதாரி.

(சுமார் 31-வருஷங்களுக்கு முன் சர் அக்பர் ஹைதாரி சொன்னதிது. யாரிடம்? — தனக்கு உத்தியோகம் கொடுப்பதாய் சொன்ன ஹைதராபாத் நைஜாமிடத்தில். பர்தா வழக்கம் ஒழிக்கப்படுவது இன்றுகூட ஒரு பிரச்னையாக

இருந்து வருகிறது. ஆனால் வீரர் ஹைதாரி மூன்று பத்து வருஷங்களுக்குமுன்னே அப்பழக்கத்தை எதிர்த்திருக்கிறார். அன்றியும் ஒரு முஸ்லீம் அரசரிடம் தன் நிபந்தனையை வற்புறுத்தினாரென்றால், அதன்மீது அவர் கொண்டிருந்த வெறுப்பும், தன் மனைவியிடம் கொண்டிருந்த அன்பும், பெண் சுதந்திரத்திலுள்ள பற்றும் நன்கு விளங்குகிறது. இச்சந்தர்ப்பத்தில் மாஜி ஆப்கன் அரசர் வீரர் அமனுல்லாகான் ஞாபகம்வருகிறது. இத்தகைய வீரர் காட்டியவழியை ஒரு சிலராவது இன்று பின்பற்றிவருவது ஒரு ஆறுதலே.)

## பெண் வக்கீல்.

புனாவைச்சேர்ந்த, ஸ்ரீமதி சுபத்ராபாய் என்ற பெண் வக்கீலை புனா நகரசபையார், நகரசபை வக்கீலாய் நியமித்திருக்கின்றனர். —பத்திரிகை செய்தி.

(பெண்மைக்கு பெருமையளித்த புனா நகரசபையைப் பாராட்டுகிறோம். ஏனையோர் பின்பற்ற இஃதோர் தக்க எடுத்துக்காட்டாகும். தமிழ் நாட்டில் ஏதாவதொரு நகரசபை தலைவர் பதவி ஒரு பெண்மணிக்கு பரீக்ஷார்த்தமாகவாவது கொடுக்கப்படலாகாதாவென பல நாளாய் சிந்தித்து வருகிறோம். சகோதரிகள் இவ்வழியில் யாரேனும் துணிவார்களா?)

## உண்மைக் காதல்!

இராக்மன்னர் காஜியின் சகோதரி, இளவரசி அஜ்ஜா ஒரு இத்தாலியப் போர்ட்டரைக் காதலித்ததால், மதம்மாறி அவரை மணந்துகொண்டாள். அவளுடைய சகோதரி விவாகத்தைத் தடுக்க எவ்வளவோ முயன்றும் முடியாது போயிற்று. —பத்திரிகைச் செய்தி.

(என்னே காதலின் வேகம் — ஜாதி, மதம், சுற்றம், செல்வம், அழகு எல்லாம் உயரிய உண்மைக் காதலுக்கு முன்னால் நிற்பதில்லை. யாவற்றையும் காதல் தகர்த்தெறியும் வன்மையுடையது. ஆகா! அத்தகைய "காதல் தெய்வம்" நம் இந்தியநாடெங்கும் நர்த்தனம் புரியலாகாதா? சாதிப் பூசல், சமயவெறி, வைதீகப்பித்து, முதலாளித்தன்மை மூடப்பழக்க வழக்கம் எல்லாம் ஆடிக்காற்றிற் சிக்கிய பஞ்செனப்பறக்குமே. அப்படி ஒருகாலம் வரும்; வரும்.)



## நாட்டியப் பைத்தியம்.

பாரதமாதாவின் சேவையைவிட்டு பரதநாட்டியத்தில் சேர்ந்தால் பல அநுகூலங்கள் உண்டாகும். நாட்டியத்திலும் நாட்டியம் ஆடுபவர்களிடத்திலும் குரங்குக்கு அத்யந்த பிரியம். —பத்திரிகைச் செய்தி.

(என்ன ஆச்சர்யம்! நாம் இதுவரை குரங்குக்கு பழம் முதலியவை தின்பதில்,— தன் இனத்தோடு சண்டை போடுவதில்,— சொந்தக்காரர் கண்ணயரும் நிமிடம், அப்பேஸ் திருட்டிலும்தான் பிரியம் அதிகம் என்றிருந்தோம். ஆனால் இதைப் படிக்கும்போது பேராச்சரியம் அடைந்தோம். மூக்கில் கையைவைத்தும்—ஒரு சிமிட்டா பொடியை மூக்கில் அள்ளிக்கொட்டியும் — ஒரு சுருட்டை பற்றவைத்து புகை விட்டுக்கொண்டும் — தலையைத் தடவிக்கொண்டும் மணிக்கணக்கில் யோசனை செய்துபார்த்தும் இது எந்தக் குரங்கெனக் கண்டுபிடிக்க இயலவில்லை.—ஒகோ பழனிமலைக் குரங்காய் இருக்கலாமோ? இல்லை; அதல்ல — பின் திருப்பதிக்குரங்காய் இருக்கலாமோ? இல்லை; இல்லை. — பின் கொடைக்கானல் ரோட் ஸ்டேஷனில் புகைவண்டி வந்து நின்றதும் ஒரே "ஜம்ப்பில்" உள்ளேவருகிற குரங்காயும் இருக்கமுடியாது. என்னய்யா ஆச்சர்யம்! சர்க்கஸ்குரங்கோ? ஊகூம். அதுவுமல்ல. வாசகர்களே இந்த விகடக்குரங்குதான் எது? என் சஷ்டத்தை நீக்குங்களேன்.)

## இரண்டையும் பார்.

"எனக்கு வயது 80-ஆகிறது சற்றுமுன் என்னால் இயற்றப்பட்ட 'காண்டிடா,என்ற நாடகம் நடிக்கப்பட்டதை பார்த்தீர்கள். இனி நான் பொதுக்கூட்டங்களில் மேடைப் பிரசங்கங்கள்செய்யப்போவதில்லை. —அறிஞர் பேர்னாட்ஷா.

முன்னெச்சரிக்கையில்லாது மதுரை நகரசபை கமிஷனர் நடந்துகொண்ட விதம் (ஆக்ரமிப்பு ஒழிப்பு வேலையில்) மிகவும் கண்டிக்கத்தக்கது. இந்தக் கமிஷனர் இந்நகரில் உத்தியோகம் வகிக்கும் வரையில் நான் எந்த பொதுக்கூட்டங்களிலும் பேசப்போவதில்லை. —மதுரை, ஏ. வைத்தினாதய்யர்.

## வாலிபர் கடமை.

முன்காலத்தில் 33-கோடி. தேவர்கள் இருந்தார்களென்று கூறியதானது இந்நாட்டு மக்களையே குறிப்பதாகும். இப்பொழுது 33-கோடி தேவர்களும் ராக்ஷசர்களாகிவிட்டோம் — கோழைகளாகிவிட்டோம். இந்த நிலையை மாற்றவேண்டியது வாலிபர்களது கடமையாகும்.

டாக்டர் - வரதராஜுலு.


## கான வித்யா பிரகாசினி.

இந்நூலில் ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளின் கீர்த்தனங்களுக்கு அரும் பதவுரை, விரிவுரை முதலியன விளக்கப்பட்டிருப்பதோடு, ஒவ்வொரு கிருதிக்கும் ஸ்வரம் கல்பனை சிட்டா ஸ்வரம் விபரமாய் எழுதப்பட்டிருக்கிறது. ராகசம்பந்தமான விபரங்கள், ராகம் பாடும் முறை, ராக சஞ்சார ஸ்வரங்கள் முதலியன இப் பிரகாசினியில் ஓர் நூதன அம்சமாகும்.

இஃது ஸங்கீதம் பயிலும் மாணவர்களுக்கு ஓர் வழிகாட்டியாகவும், தொழில் செய்பவர்களுக்கு ஓர் இன்றியமையாத் தோழனாகவுமிருக்கும்.

இவ்வரிய நூல் பெருங்குளம் ஸங்கீத வித்வான் ஸ்ரீனிவாஸ அய்யங்கார், தமது அநுபவங்களைத்திரட்டி ஓர் நூலாக வெளியிடப்பட்டு, பிரபல வித்வான்களின் நன்மதிப்பும் ஆதரவும் நிரம்பியது.

முதல் பாகம் விலை ரூ. 2—0—0 } தபால் சிலவு
இரண்டாம் பாகம் ரூ. 2—8—0 } வேறு

கிடைக்குமிடம்:—

**மலையப்பசாமி வைத்தியசாலை,**

பிராஞ்சு:— 1-54 அருணாசல நாயக்கன் தெரு,
சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.


# அகத்தியர்
# குணவாகடம் 3000.

(சாமி விருதை, சிவஞான யோகிகள்.)

(292-ம் பக்கத் தொடர்ச்சி.)

18993

கேளடா வியாதிக்கு அபின் தைலம்
    கெடியான கற்பூரத் தைலந் தேய்ப்பாய்
வாளடா லேபனங்கள் அசுவகெந்திச் [illegible]
    வளமான வச்ரபீச குடிதைல மப்பா
நாளடா விடமுட்டித் தைலம் நாபி
    நலமான இவைகளைத்தான் தேய்ப்பா யாகில்
மூளடா வியாதியெல்லாம் தீர்ந்து போகும்
    முக்கியமாய்ச் சூரியா வர்த்தவா தங்கள் (177

### சூரியாவர்த்த வாதம்.

வாதமடா சூரியாவர்த்த வாத ரோகம்
    வன்மைதனைச் சொல்லுகிறேன் மைந்தா கேளு
நீதமடா ஒருபுறத்துப் புருவம் நெற்றி
    தேள் கொட்டினாப்போலத் தோன்றும் பாரு
வேதனைகள் செய்யுமப்பா குமட்டலோடு
    வெகுவான தூர்ப்பலமே யதிகங் காட்டும்
நீதமுடன் பிரதிதினம் உதயத்திற் கண்டு
    நிச்சயமாய் மத்தியானம் வரையதிக மாகி (178)

### திமிர்வாதம்.

வரிசையாய்த் திமிர்வாதம் வன்மை கேளாய்
    வகையான சரபத்தின் நரம்புக் கப்பா
சரியான உணர்ச்சிதான் கெடுவ தாலும்
    சலிக்காத பஞ்சேந்திரிய நரம்புக் கப்பா

குரியான உச்சிதான் கெடுவ தாலே
குடிகெடுத்த திமிர்வாதம் உண்டாம் பாரு
விரியான விடமுட்டித் தைலந் தேய்க்க
விட்டோடிப் போகுமடா திமிர்வாதந் தானே. (179)

## தலைநோயுண்டாகும் விபரம்.

பாரேநீ தலைவலிதா னறுவிதங்க ளுண்டு
பண்பாக வொவ்வொன் றும் பகரக் கேளாய்
கூறேநீ தலைச்சதையைப் பற்றி யொன்று
குறிப்பாக வெலும்பினுட மேலே யப்பா
சீராக மூடிக்கொண்ட சிரசி லப்பா
சிறப்பான சவ்வைப்பற்றிய தலைநோ வொன்றும்
நேரான பரிசத்தின் நரம்புக்கப்பா
நிச்சயமாய்ப் பற்றியதோர் தலைநோ வொன்றே. (180)

ஒன்றான மூளையில்தான் இரத்தஞ் சேர்ந்து
உண்டாகும் தலைநோவின் உண்மை கேளாய்
நன்றான அக்கினியாம் மந்தத்தி னாலே
நாடிவரும் தலைநோய்தா னென்றே யாகும்
கன்றான மூளைநோய் தன்னா லப்பா
காணுகின்ற தலைநோய்தா னென்றே யாகும்
அன்றான ஆறுவித நோயின் நேர்மை
அன்புடனே நீயறிய அறைகு வேனே. (182)

அறைகுவேன் சதையைப்பற்றிக் காணும் நோயின்
அப்பனே வேதனை சிரசில்முற்றுங் காணும
தெரிகுவாய் வலியதுதான் தணிந்து காணும்
தெளிந்தவிரு புருவமுன் தாள்வாய்க் கட்டைச்
சரியாக அசைப்பதி னாலு மப்பா
சதைகளைத்தான் அழுத்துவதி னாலு மப்பா
பரிவாக விரலதினால் தட்டுவதி னாலு
பண்பாக நோயதுதா னதிகரிக்கும் பாரே. (182)



பாரேநீ அப்போது முகம்பிடரி தோளும்
பக்குவமா யின்னும்பல விடங்களில் தானும்
சீரான நோயதுதான் தொடர்ந்து காட்டும்
தெளிந்ததொரு வின்னேப்வருங் காரணத்தைக் கேளாய்
கூரான சீதளமே காரணமே யாகும்
குவலயத்தில் நீயிதற்கு மருந்து கேளாய்
நேரான வாதநோய்க்குச் செய்யும்வேலை
நிச்சயமாய்ச் செய்திட்டால் தீரும் பாரே. (183)

தீருமடா தலைவலி எலும்பு மேலே
திறமாக மூடியிருக்கும் சவ்வைப் பற்றி
சாருமடா காணுகிற தலைநோய் தானே
சதிராக ஓரிடத்தில் தங்கிக் கொண்டு
சீருமடா அழுத்தினால் நோயதி கரிக்கும்
சிறப்பான சதையசைத்தால் நோயதி கமாகும்
தேரினதோர் மாரெலும்பு காலெலும்புக் குள்ளும்
திறமாக நோய்கள்தான் செல்லும் பாரே. (184)

செல்லுகின்ற நோய்கள் ஓரிடமே தங்கில்
செயலான விக்கலது கொஞ்சங் காணும்
அல்லல்செய்யு மனக்கவலை யாலு மப்பா
அழகான சீதளத்தி னாலு மப்பா
தொல்லைசெய்யு மேகரோ கத்தி னாலும்
தொலையாத இந்தநோய் வருவ தாகும்
கல்லல்செய்து கலைத்திடவே மருந்து கேளாய்
கனமான துர்மலத்தைப் போக்கி டாயே (185)

ஆனதொரு பரிசத்தின் நரம்புகளைப் பற்றி
அப்பனே காணுகின்ற தலைநோ யுந்தான்
ஊனமில்லாப் புருவத்தில் தானு மப்பா
உற்றதொரு நாசியின் பத்தியாவும்

குறைவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டியது. பொதுவாக ஜலதோஷத்திற்கு நம்மவர்கள் சிகிச்சைசெய்து கொள்ள வைத்தியரைத் தேடுவதில்லை. தாமே சிகிச்சை செய்துகொள்ளுகின்றனர். இது நல்லபழக்கந்தான். ஆனால் சிலர் இதை வியாதி என்று கருதாது இரண்டொரு நாள் இருந்து பின்பு போய்விடுமென்று விட்டுவிடுகின்றனர், சிலர் ஜலதோஷ மாத்திரையை உட்கொள்ளுகின்றனர். சி. எம். சாமி நசியம் இவ்வியாதியை உடனே நிவர்த்திக்கும் என்பதை அநேகர் அறியாதிருக்கின்றனர். ஒன்று அல்லது இரண்டு வேளை உபயோகித்தவுடனேயே ஜலதோஷம் இருந்தவிடம் தெரியாமல் ஓடிவிடும்.

(இம்மருந்து வேண்டியவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். **மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி**).

கர்ப்பூரப் புகை, மட்டிப்பால் புகை, மஞ்சள் புகை இவைகளில் ஏதாவதொன்றை மூக்கிற்குள் செலுத்தலாம். சுகபேதிக்குச் சாப்பிடுவதாலும் குணம் உண்டாகும். ஓமம், மிளகுத்தூள், கருஞ்சீரகம் இவைகளைத் தனித்தோ அல்லது சேர்த்தோ துணியில் முடிந்து முகரலாம். சாம்பிராணித்தைலத்தை நெற்றியின்மேல் தடவலாம். ஏலாதித் தைலம் ஸ்நானம் செய்துவருவதாலும் நல்ல குணமுண்டு.

## மருந்து.

குங்குமப்பூ, பச்சைக் கர்ப்பூரம் இவைகளை வெற்றிலைச் சாறு விட்டு அரைத்து நெற்றியிலும் உச்சியிலும் தடவலாம். சாம்பிராணி, ஓமம், கஸ்தூரிமஞ்சள் இவைகளை தண்ணீர்விட்டரைத்துக் கொதிக்கவைத்து பற்றுப் போடலாம். சுக்கு, மிளகு, ஓமம், அரத்தை, அதிமதுரம் வகைக்கு கால் ரூபா யெடை எடுத்து கால்படி தண்ணீர் விட்டு வீசப்படியாய்ச் சுண்டவைத்து வேளைக்கு அரை வீசம் படியாக, நாள் ஒன்றுக்கு 2வேளை சாப்பிடலாம். கோரோசனைக் குளிகையை துளசிச் சாற்றில் சாப்பிடலாம்.

குறிப்பு:— கோரோசனைக் குளிகை செய்யும் விதம் இவ்விதழில் மருந்து செய் பகுதியில் காண்க.

# மருந்து செய் பகுதி.

## கோரோசனைக் குளிகை.

கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கர்ப்பூரம், ஏலம், கிராம்பு, சாதிக்காய், அரத்தை இவைகளைச் சமனெடை எடுத்து தூள் செய்து பன்னீர் விட்டு மைபோலரைத்து மிளகுப் பிரமாணமாக குளிகை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

**அளவு:—** வேளைக்கு 1-குளிகை. துளசிச் சாற்றிலரைத்து நாள் 1-க்கு 2-வேளை காலை மாலையாகச் சாப்பிடலாம். குழந்தைகளுக்கு வயதுக்குத் தக்கபடி மருந்தைக் குறைத்து தாய்ப்பாலில் கொடுக்கவும்.

**உபயோகம்:—** இருமல், ஜலதோஷம், மேகவாய்வு, சிசுக்களுக்குண்டாகும் மாந்தவலி முதலியன நீங்கும்.

**பத்தியம்:—** புளி நீக்கவும்.

---

## சீரக லேகியம்.

எலுமிச்சம்பழச் சாற்றில் ஊறவைத்து உலர்த்திய சீரகம் பலம் 6, ஓமம் பலம் $\frac{1}{4}$, ஏலம் பலம் $\frac{1}{4}$, கிராம்பு பலம் $\frac{1}{2}$, சுக்கு பலம் $1\frac{1}{4}$ கோஷ்டம் பலம் 1, கர்ப்பூரவல்லி சமூலம் பலம் 2. இவைகளையெல்லாம் சூரணித்து வஸ்திரகாயம் செய்து 10-பலம் கற்கண்டை பாகுசெய்து அதில் கிளறி நெய் படி $\frac{1}{3}$, தேன் படி வீசம் சேர்த்து எடுத்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு:—** வேளைக்கு கழற்சிக்காய் பிரமாணம் காலை மாலையாக நாள் ஒன்றுக்கு 2-வேளை வீதம் உட்கொள்ள.

**உபயோகம்:** பித்தம் கிறுகிறுப்பு, வயிற்றுவலி, வாந்தி அஜீரணம் முதலியன குணமாகும்.

**பத்தியம்:—** ஒன்றுமில்லை.

## வேதவியாசர் முதற்காண்டம்.

ஆதிபரி பூரணமா முமையாள் பாதம்
அப்புரத்தே நின்ற வெமதையர் பாதம்
வேதியனார் தமையீன்ற விஷ்ணு பாதம்
விமலனரீன்ற கணபதியின் பாதம்
நீதியுள்ள முனிவரிருடியர்தம் பாதம்
நிர்மல நிரஞ்சனமாய் நின்றோன் பாதம்
சோதிமதியணி பரமனடியார் பாதம்
சுந்தரமார் வேலவர்தம் பாதம் காப்பே. 1

காப்பான பன்னீராயிரம் பாவுள்ளே
கட்டாகப் பாடிவைத்த முதனூலப்பா
தாப்பான வகைகுலுக்கி ஐந்நூறாக
சாற்றினேனது சார்பு நூலாமப்பா
வாய்ப்பான சுருக்கவழி நூலாமிதை
வகுத்திட்டேன் வைத்தியரின்புறவ வேண்டிக்
கோப்பான சூத்திரத்தை வெளிவிடாதே
குண்டலியாஞ் சுக்கமதை யடக்கம்பண்ணே. 2

### கர்ப்ப நோய்க்கு.

பண்ணுவாய் கேளப்பா வழிகேளப்பா
பற்றறுக்குடல் வாதமொழியக் கேளாய்
விண்ணுன நேர்வாளம் பலம்தோறும்
மேதினியில் புளியப்பிக் கரைத்துவாங்கி
கண்ணுன வாளத்தினோடு போக்கி
கனமாக வெரியிட்டுக் கொதிக்கச்சுத்தி
சண்ணுமடா நஞ்சுதள்ளி வாளந்தன்னைச்
சார்வான சாதிலிங்கம் கழஞ்சு மூன்றே. 3

(தொடரும்)



## நாடகப் பகுதி.

### நாகானந்தன்.

(லேட் H. ராமசாமி அய்யர் அவர்களால் எழுதப்பட்டது)

(302-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கம் 4.] [களம் 6.

சுகுணபாண்டியன், சத்தியகீர்த்தி, சத்தியவிரதன், சத்தியசீலன், ஜயதுங்கன், ஜயசீலன், ஜயவிரதன், நாகானந்தன், சுந்திரகுமாரன், முத்துவீரன், மதுரைவீரன், முத்துமாலை, மோகனமாலை, சூரன், நடராஜய்யர்.

காலம்—இரவு. இடம்—சபாமண்டபம்.

சுகுணன்:- அமாத்தியர்காள்! இன்று பிரபு ஜயதுங்கர் புத்திரன் சுந்திரகுமாரன் என் சிற்றப்பன் வரகுணவழுதியாரை நாகானந்தன் கொன்றதாய் வந்து முறையிடுகின்றனன். கொலையுண்டது சிற்றப்பன்; கொன்றது சேனாதிபதி, கொலைக்குற்றஞ்சாட்டுவது என்சகோதரி மகன். சாக்ஷிகளோ என் பெண் சுகுணசுந்தரியின் தோழிகள் முத்துமாலை, மோகனமாலை, வனபரிபாலகர் முத்துவீரன், மதுரைவீரன், உத்தியானவன வாயிற்காப்போன் சூரன். இக்குற்றத்தினை விசாரித்து சுருக்கி, மெய்விளக்கி, பயன் தொகுத்து, சோர்வு அறச்சொல்லுமாறு அஞ்சுதலின்றி உரையாடுவீர்களாக. ஏனெனில் நீங்களே செறிந்தவர், தெளிந்த நூலார், சிறந்தவை இயற்றுவிக்கும் அமைதியர். ஆதலின் விசாரணையைத்துவக்குக.

சத்தியகீர்த்தி:- சேனாதிபதியாரே! தங்கள்மேல் வரகுணவழுதியாரைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுளது. அதற்கு என்ன சொல்லுகின்றீர்கள்?

நாகானந்தன்:- அமாத்தியர் பெருமானே! நான் நல்லைலாராம் சுந்திரானந்தரால் வளர்க்கப்பட்டவன். சின்னஞ்

சிறுவயதுமுதலே சர்வபிராணிகளும் ஈஸ்வரன் சிருஷ்டிகள். ஆதலின் எறும்பு முதல் யானைபரியந்தம் உள்ள சமஸ்தமும் அவரது அருமைப் புதல்வர்களே. பகுத்தறிவு வாய்ந்த மானிடரும் அவ்வாறே. மானிடன் சர்வஜேஷ்ட புத்திரன் ஆகின்றான். ஜேஷ்டர்களாகிய மானிடர்கள் தங்களுள் ஒருவரை மற்றவரும், சகோதரர்களாகிய மற்றப்பிராணிகளையும் நேசித்தல்வேண்டுமென அவரால் போதிக்கப்பெற்றுளேன். இது பரியந்தம் என்னைத் துன்புறுத்தும் மூட்டை, கொசு, எறும்பு முதலிய அற்பப் பிராணிகளையும் கொன்றறியேன். போர்வீரன் என்னும் தர்மம்கருதி வில்லம்பு எடுக்கையிலுங்கூட எதிர்த்தோரன்றிப் பிறரைக் கொடும்பகைஞரேனும் கொன்றறியேன். அவ்வாறிருக்க வயதில் முதியவரும், என்னிடம் அன்பும், ஆதரவுமுள்ளவரும், என் வேந்தருக்குச் சிற்றப்பனுமானவருமான வரகுணவழுதியாரை யான் கொல்ல சிறிதும் காரணமேயில்லை. யான் அவரைக் கொன்றேன் அல்லேன் என்பதற்கு சர்வேஸ்வரனே சாக்ஷி.

சத்தியகீர்த்தி:— பாண்டியர் பெருமானே! சாட்டிய குற்றம் தாம் புரிந்தவரல்லர் என நாகானந்தர் பிரமாண வாக்குமூலம் தந்துவிட்டனர். இனி சாக்ஷிகளைக்கொண்டு அவர் குற்றவாளியா அன்றி இல்லையா? என்பதை விசாரணை புரிவேன். சேவகா! சுந்திரகுமாரரை விளிப்பாயாக.

சேவகன்:— இளவரசர் சுந்திரகுமாரரே வருக.

(சுந்திரகுமாரன் பிரவேசம்.)

சத்தியகீர்த்தி:— ஐயன்மீர்! தங்களை யான் வினவ இருக்கும் வினாக்களுக்குப் பிரமாணமாய் உண்மை பகரப் பிரார்த்திக்கிறேன்.

சுந்திரகுமாரன்:— பிரதம அமைச்சரவர்களுக்கு வந்தனம். யான் தேவி மீனாம்பிகை ஆணை சத்தியமே பகர்வேன்.

சத்தியகீர்த்தி:- ஐயா! சேனாதிபதி நாகானந்தர் வரகுண வழுதியாரைக் கொலைசெய்யப் பிரத்தியக்ஷமே கண்டீரோ?

சுந்திரகுமாரன்:— ஐயன்மீர்! ஆம்; நான் நேரே அவர் வரகுணரைக் கொல்லக் கண்டேன்.

சத்தியகீர்த்தி:— அவர் எவ்வாறு கொன்றார்?



சுந்திரகுமாரன்:— பெரும் மரக்கொம்பு ஒன்றினைக் கையிற்றாங்கி வரகுணவழுதியார் சிரமிசை ஓங்கியடித்துக் கொன்றனர்.

சத்தியகீர்த்தி:—வரகுணவழுதியார் அவ்வடியினைத் தப்புவான் யாதும் பிரயத்தனம் செய்தாரில்லையா?

சுந்திரகுமாரன்:— அவர் முன்னேக்கி ஓடிக்கொண்டு இருந்தனர். நாகானந்தர் பின் தொடர்ந்தோடி நெருங்கி ஓங்கி அடித்தனர். அதுபற்றி அவர் யாதும் தப்புவதற்கேற்ற உபாயம் செய்ய முடியவேயில்லை.

சத்தியகீர்த்தி:- வரகுணவழுதியார் ஓடுவதையும், நாகானந்தர் தொடர்ந்து ஓடுவதையும் கண்ட தாங்கள் ஏன் ஓடி இக்கொலை நடவாது தடுத்திருத்தல் கூடாது?

சுந்திரகுமாரன்:— ஐயா! அக்கொலையைத் தடுப்பதன் பொருட்டே யானும் பின்தொடர்ந்தேன். பொல்லாத வேளையாய் யான் நெருங்குவதன் முன்னரே செய்கை நடந்துவிட்டது; வரகுணரும் வீழ்ந்து இறந்துவிட்டனர். ஆயினும் ஓரே பாய்ச்சலாய்ப்பாய்ந்து ஓங்கிய கம்புங்கையுமாய் நின்ற நாகானந்தரை இறுகக்கட்டிப் பிடித்தேன். 'கொலை; கொலை' என உரக்கக் கூவினேன். மதுரைவீரனும், முத்துவீரனும் ஓடோடியும் வந்தனர். நாகானந்தரைப் பற்றிக்கட்டினர். பின்னர் கொணர்ந்தோம் அவரை மன்னரவை.

சத்தியகீர்த்தி:— நாகானந்தர் வரகுணரைக் கொல்ல வேண்டுவதான காரணம் யாதேனுமுளதோ?

சுந்திரகுமாரன்:— நாகானந்தர் யானையின்மீது சுகுண சுந்தரியாரைக் கண்டதுமுதல் அவள்பால் தகாக்காதல் கொண்டனர். அவளைக்காண வரவொரு உத்தியானம் வந்தார். சுகுணசுந்தரியாரும், அவள் தன் தோழியாரும் ஆடிய மாற்றங்கேட்டார். இத்தவறினைக்கண்டார் வரகுண வழுதியார். சிறையாக்க முயன்றார். நாகானந்தர் சினந்து தொடர்ந்து கொன்றனர் என்பது என் கொள்கை.

சத்தியகீர்த்தி:— தாங்கள் சுகுணசுந்தரியாரும் அவள் தன் தோழியாரும் சம்பாஷித்தவிடம் போனீரோ?

சுந்திரகுமாரன்:— நான் அங்கே போனேன் இல்லை.

சத்தியகீர்த்தி:— இன்று அங்குப்போகாதிருப்பதற்கு காரணம் யாதோ?

சுந்திரகுமாரன்:— சுகுணசுந்தரியார் உடம்பு சௌக்கியமின்மை கருதி அவர்களுடன் அதிகமே கலந்து வார்த்தையாடுவதில்லை.

சத்தியகீர்த்தி:- காதலன் வழக்கம் காதலிதன் அசௌக்கியகாலத்தில் அவளையடிக்கடி கண்டாறுதல்கூறுதலன்றோ!

சுந்திரகுமாரன்:— இளவரசியார் எப்பொழுதும் ஏகாந்தத்தையே நாடுகின்றனள். தன் பிரியமுள்ள தோழியரையுங்கூட விட்டுப்பிரிந்திருக்க ஆசைகொள்கின்றனள். ஆதலின் அவள்பால் அதிகம் செல்வதில்லை.

சத்தியகீர்த்தி:— தோழியரினும் காதலன் அவள்தன் க்ஷேமத்தை மிகுதியும் கோருபவரன்றோ? அதுபற்றியடிக்கடி அவள்பாற்சென்று இன்மொழி பகர்ந்து அவள்தன் மனப்போக்கை வேறுவழிப்படுத்த வேண்டாமா?

சுந்திரகுமாரன்:- ஆம்; அது அவஸ்யமே. ஆயின் வேறு காரியார்த்தமாய் இன்று வேறிடம் போனதுபற்றி சற்றுத் தாமதித்து வந்தேன். அதற்குள் அவர்கள் கன்னிமாடம் போய்விட்டனர்.

சத்தியகீர்த்தி:— ஆயின் தாங்கள் நாகானந்தரைக்காணும் சமயம் அவர்கள் அங்கு இல்லைபோலும்.

சுந்திரகுமாரன்: ஆம் அவர்கள் உத்தியானவனம் இல்லை.

சத்தியகீர்த்தி:— இதற்குமுன் நாகானந்தரை உத்தியானத்தில் இன்று காணவில்லையோ?

சுந்திரகுமாரன்:- இதற்கு சற்றுமுன் நாகானந்தர் செடிகளுள் மறைந்து காந்தமேடை நோக்கிப்போகக் கண்டேன்.

சத்தியகீர்த்தி:- முன்கண்ட காலத்திற்கும், பின்கண்ட காலத்திற்கும் என்ன வித்தியாசமிருக்கும்?

சுந்திரகுமாரன்:— இரண்டு காலத்திற்கும் இடையே மூன்று நாழிகை இருந்ததாய்ச் சொல்லலாம்.

சத்தியகீர்த்தி:— நாகானந்தர் சந்திரகாந்தமேடையை நோக்கிப்போவது கண்டும் அங்கு அரசிளங்குமரிகளும், தோழிகளும் விளையாடுவார்கள் என்பது தெரிந்தும் தாங்கள் ஏன் அவர்தம் போக்கினைத் தடுத்திருத்தல் கூடாது?

சுந்திரகுமாரன்:- சுகுணசுந்தரியார் நோயுற்றபின் அதிகமே உத்தியானம் வருவது வழக்கமில்லை. நாகானந்தர்



வரகுணவழுதியார் அனுமதியின்றி உத்தியானம் நுழைதல் முடியாது. ஆதலின் உத்தியானம் காணும் விஷயமாய் அவர்தம் அனுமதியின்மீதே நாகானந்தர் இன்று வந்திருப்பாரெனக் கொண்டு அவரைத்தடுக்கவில்லை.

சத்தியகீர்த்தி:— தாம் ஏறக்குறைய மூன்று நாழிகை பரியந்தம் சுகுணசுந்தரியாரும் அவர்தம் தோழியாரும் சம்பாஷித்திருந்த காந்த மேடை செல்லாது உத்தியானத்தில் என்ன செய்தீரோ?

சுந்திரகுமாரன்:— என் சிறிய பாட்டனுரைக்கண்டு அந்நிய ஆடவனைக் கன்னியர் உலாவும் உத்தியானம் விடலாமாவெனக் கேட்கச் சென்றேன். அவர் அவரது இருப்பிடம் இல்லாமை தெரிந்து உத்தியானத்தின் பல இடங்களிலும் தேடியலைந்தேன். கடையாய் காந்தமேடையின் பின்புறம் அவர் ஓட நாகானந்தர் துடர்ந்தோடி அவர்தன்னைக் கொல்லக்கண்டேன். இதனிடையில் மூன்று நாழிகைகாலம் கழிந்துவிட்டது.

சத்தியகீர்த்தி:— தாங்கள் நாகானந்தர் சந்திரகாந்த மேடைநோக்கி ஏகுவதுகண்டு அவரைத்துடர்ந்து ராஜகுமாரத்தியும் தோழியரும் வார்த்தையாடியவிடம் சென்று இருப்பீரேல் அவர்களைக் கண்டிருத்தல் கூடுமன்றோ?

சுந்திரகுமாரன்:— ஆம்; அது கூடும். ஆனால் அவர்கள் இன்று உத்தியானம் வருவரென்று எண்ணுததால் அவ்வாறு செய்யவில்லை.

சத்தியகீர்த்தி:— நாகானந்தர் வரகுணவழுதியாரைக் கொல்வதற்குக் காரணம் இளவரசியாரும், தோழியாரும் ஆடிய மாற்றம் ஒதுக்கிடமிருந்து கேட்டதறிந்த வரகுணவழுதியார் சிறையாக்க முயன்றிருத்தல் வேண்டும். அதுபற்றி அவரைக்கொன்றிருத்தல் வேண்டும் என்பது தமது கருத்தா?

சுந்திரகுமாரன்:— ஆம்; அதுவே என் கருத்து.

சத்தியகீர்த்தி:— வேந்தர்பெருமானே! சுந்திரகுமாரன் வாய்மொழி முடிந்தது. மற்றயவர் விசாரணை செய்யவா?

சுகுணபாண்டியன்:- அமாத்தியரே அவ்வாறே செய்க.

(தொடரும்.)

# செய்தித் திரட்டு.

## 20-ம் நூற்றாண்டின் அதிசயம்.

### விலா வழியாய்ப் பிரசவம்.

எட்டயாபுரத்துக்குச் சமீபமுள்ள கோலவார்பட்டி என்னும் ஊரிலுள்ள மணியகார ஜாதியைச் சேர்ந்த ஓர் கர்ப்பிணிக்கு பத்தாவது மாதத்தில் இடது விலாவில் ஓர் சிலந்தி உண்டாயிற்று. பின்பு சிலந்தி உடைந்து சிறிது நேரத்தில் அவ்வழியாகவே குழந்தை வெளிவந்து சுகமாய் இருக்கிறது. பின்பு இழை மூட்டி அவ்வாயிலைத் தைத்து சிகிச்சை செய்யப்பட்டது. தாயும் சுகமாய் இருக்கிறாள்.

.... .... ....

பிரிட்டிஷ் பாங்குகளில் பணம் போடுகிறவர்களுக்கு ஒரு யந்திரம் ரசீது கொடுக்கிறதாம். பணத்தை உள்ளே போட்டதும் அடுத்த நிமிஷம் அதன் போட்டோவும் ரசீதும் வெளியே வருகிறதாம்.

.... .... ....

சீனாவைச் சேர்ந்த ஜெசுவான் மாகாணத்திலுள்ள விவசாயிகள் 30 சதம் மதிப்புள்ள அரிசிக்கு தங்கள் மனைவியரையும், ஒரு டாலர் காசுக்கு தங்கள் இளம் பெண்களையும் விற்றுவருகிறார்களாம்.

பீகாரில் (இந்தியா) விவசாயிகள் கிஸ்திகூட கட்ட முடியாத பரிதாப நிலையைக் காங்கிரஸ் விசாரணைக் கமிட்டியார் விவரித்திருக்கிறார்கள். அவர்கள் கிஸ்தி பணத்திற்காக பெண்களையும், குழந்தையையும் விற்றே பணம் சேர்க்க முடிகிறதாம்.





### தபால் முத்திரைகள்.

தற்பொழுது உலகம் முழுவதிலும் வழங்கப்படும் தபால் முத்திரைகளில் 58600 வகைகள் இருக்கின்றனவாம்.

.... ... ....

அபிசீனியச் சக்ரவர்த்தி மிகுந்த நுண்ணிய அரசியல் அறிவு பெற்றவராம். பிற்கால மாறுதல்களை முன் யோசனையுடன் சமாளிக்கச்செய்த தந்திரம் இதிலிருந்து வெளியாகிறது. பிரிட்டிஷ் பிரஞ்சு பாங்கிகளில் ஏராளமான பணத்தைப்போட்டு வைத்திருந்தாராம். யுத்த சமயத்தில் எடுத்ததுபோக தற்பொழுது சுமார் 45-லட்சம் பவுன்களுக்கு மேல் இருக்குமென்று தெரிகிறது.

... ... ....

அமெரிக்காவிலுள்ள போனிக்ஸ் என்ற நகரத்தில் விபசாரம் செய்யும் பெண்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்படுகிறதாம். விபசாரம் செய்பவர்கள் 25 டாலரும், விடுதியை நடத்துகிறவர்கள் 50 டாலரும் கொடுக்கின்றனராம். வைசிபசாரிகள் மாதம் இருமுறை மாஜிஸ்திரேட்முன் ஆஜராகி பரீட்சிக்கப்படுகிறார்களாம். நகர சபைக்கு இதனால் 25000 டாலர் வருமானம் கிடைக்கிறதாம்.

.... ... ...

நாசிக் தாலூகாபோர்டு மெம்பரும், பிரபல ஹரிஜனத் தலைவருமான ஸ்ரீ சால்வி என்பவர் தமது மனைவியுடன் நந்தூர்வித்யா என்ற ஊருக்குச் சென்றுகொண்டு இருந்தனராம். சில மராட்டியர் குறுக்கிட்டு அவர் மனைவியார் செருப்பணிந்து தெருக்களில் செல்வதை ஆட்சேபித்தனராம். சமாளிக்கமுடியாத நிலைமையில் செருப்பைக் கையில் எடுத்துக் கொண்டு வெறுங்காலில் வெயிலில் நடந்து சென்றனராம்.

(ஆ! இன்னுமா இந்தக்கொடுமை. இத்தகைய மனப்பான்மை உள்ளவர்களை எல்லாம் ஒருங்குதிரட்டி அவர்களுக்கு அக்கினி குண்டம் வளர்த்து அதில் முழுகச்செய்தால் என்ன?—ஆனால் சர்க்கார் அனுமதிப்பார்க

## பி. ஏ. நாவிதர்.

அமிர்தசரசிலுள்ள விக்டர் என்ற பி. ஏ. பட்டதாரி இட்டாலி, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகள் சுற்றி நாவிதப் பயிற்சி பெற்றுவர புறப்பட்டாராம். திரும்பியதும் பஞ்சாப்பில் பல இடங்களில் க்ஷவரக் கடைகள் வைப்பாராம்.

... ... ... ...

ஜெர்மனியில் வைத்தியத் தொழிலுக்கு பயிற்சிபெற்று வருகிறவர்களில் 100க்கு 20பேர்கள் ஸ்திரீகளாம்.

.... .... ...

பாதுகாப்புவிடுதிகள் சரிவர இல்லாமையால் விபசாரத் தடைச்சட்டம் அமுலுக்கு தீவிரமாய் வரமுடியாது போயிற்றாம். அதற்காக இங்கிலாந்திலிருந்து மிஸ். மக்கென்சி என்பவர் வரப்போகிறாராம். ௸யார் வந்ததும் சர்க்கார் சம்ரக்ஷணை விடுதிகள் கட்டுவார்களாம்.

... .... ....

ஸ்ரீமதி சுப்ரவ பௌனிக் என்ற பெண் கல்கத்தா சர்வகலாசாலையில் பி. ஏ. வகுப்பில் இவ்வருஷம் தேறியிருக்கிறாராம். அவருக்கு 3 குழந்தைகள் இருக்கின்றனவாம். அவரும் அவர் கணவனும் உபாத்தியாயர் தொழிலிலிருக்கிறார்களாம்.

... .... ....

ரஷ்யாவில் பெண்கள் முன்னேற்றம் குறிப்பிடத்தக்கது. அங்கு 66000 பெண்கள் என்ஜினீயர்களாகவும், 12000 பேர்கள் ரசாயன சாஸ்திர ஆராய்ச்சியாளராகவும் 42000 பெண்கள் டாக்டர்களாகவும் இருக்கிறார்களாம்.

.... .... ...

ஆஸ்திரேலியாவைச்சேர்ந்த மத்தியகுவின்ஸ்லாந்தில், அராமேக்கருகிலுள்ள ஏரியானது விநோதமானதாகும். ஏரியின் பாதி பாகம் உப்புத் தண்ணீராயும் மீதி பாகம் சுத்த ஜலமாயும் இருக்கிறதாம். மத்தியில் எவ்வித பிரிவும் இல்லையாம். தண்ணீரும் ஒன்று சேர்ந்து கலங்குவதில்லையாம். உப்பு ஜலத்திலும் நல்ல ஜலத்திலும் ஜீவிக்கும் மீன்கள் இடம் விட்டு இடம் சென்று உறவாடுவதில்லையாம்.

# பழனியில் கல்வி மந்திரி.

சென்னை அரசாங்கக் கல்விமந்திரி கனம் திவான் பகதூர் S. குமாரசாமி ரெட்டியார் பி. ஏ. பி. எல். அவர்கள் சென்ற 7—7—36ல் இந்நகர் முனிசிபல் பாடசாலையைப் பார்வையிடும் நிமித்தமாக விஜயம்செய்தார். அதுகாலை இவ்வூர் நகரசபை அங்கத்தினர்களும் ஜஸ்டிஸ் வாலிபசங்கத்தினரும் கனம் மந்திரி அவர்களை பழனி நகரசபைக்கட்டடத்தில் நன்கு வரவேற்று உபசாரப்பத்திரங்கள் வாசித்துக்கொடுத்தனர். அப்பத்திரங்களுக்குப் பதில் கூறுமுகத்து கனம் மந்திரி அவர்கள் இவ்வூர் ஓர் புராதன தெய்வஸ்தலமாயிருப்பதுகண்டு தாம் பெரிதும் மகிழ்ச்சியடைவதாகவும், இம்முக்கிய நகரில் ஓர் உயர்தர பாடசாலை அத்யாவசியமென்றும் குறிப்பிட்டதோடு ஆரம்பக்கல்வியின் அபிவிர்த்தியைக் குறித்தும் விரிவாகப்பேசினார். இவ்வூர் நகரசபையார் பணக்கஷ்டத்தால் இவ்வாண்டில் கல்விவரி விதித்திருப்பதில் எவ்வித நஷ்டமுமில்லையென்றும் சர்க்கார் ௸ கல்விவரி தொகைக்குச் சமமான தொகை அளிப்பார்களென்றும் எவ்விதத்திலாயினும் ஆரம்பக்கல்வியை நகரசபையார் விசேடஊக்கத்துடன் பரப்பவேண்டுமென்றும் கூறியதுடன் இவ்வூர் முனிசிபல் உயர்தர கலாசாலை, ஆரம்பப் பாடசாலைகள் முதலியவற்றிற்கு தம்மாலியன்ற உதவி புரிவதாயும் தெரிவித்தார்.

பின்னர், தோழர் C.S. ராமலிங்கம் வேண்டுகோளின்படி ஸ்ரீமதி அலமேலுமங்கைத் தாயாரம்மாள், M.L C. அவர்கள் நம் நாட்டின் வறுமைபற்றியும் அறியாமைபற்றியும் மேல்நாட்டு நவ நாகரீக மோகம் பற்றியும் மிக விரிவாகவும் அழகாகவும் ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினார். அதன் பின்பு கனம் மந்திரியவர்களுக்கும் ஸ்ரீமதி அம்மாளவர்களுக்கும் முனிசிபல் சேர்மன் ஜனாப். V. C. காதர்மைதீன் ராவுத்தர் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது. இக் கூட்டத்திற்கு ஏராளமான ஜனங்களும் ஸ்தல அதிகாரிகளும் வந்திருந்தனர்.

சுமார் $10\frac{1}{2}$-மணிக்கு கனம் மந்திரி அவர்கள் முனிசிபல் உயர்தர பாடசாலையையும், அடிவாரம் எலிமெண்டரி பாடசாலையையும், கான்வெண்ட் பெண் பாடசாலையையும் பார்வையிட்டார். மாலை 3-மணிக்கு கனம் மந்திரி அவர்கள் உதகமண்டலத்திற்குப் பிரயாணமானார்.

# "சுசீலா"

## சுகந்த வாசனைத் தைலம்.

நூதன முறைப்படி தயாரிக்கப்பட்டது.

ரோமம் உதிர்தல், தலையில் பொடுகு உண்டாகுதல் முதலியவைகளை நீக்கி கூந்தலை வளரச்செய்யும்.

புட்டி 1-க்கு விலை அணா 10.

கிடைக்குமிடங்கள்:-

உடுமலை K.S. ராமனாத அய்யர் ஹோட்டல், பழனி.

சென்ட்ரல் லஞ்ச் ஹோம், பழனி.

பீம விலாஸ், அடிவாரம், பழனி.



# "கிராம ஊழியன்"

(மாதம் இருமுறை வெளிவரும்)

இந்திய விவசாயிகளின் முன்னேற்றம் ஒன்றையே பெருநோக்கமாகக் கொண்டு கடல் கடந்த இந்தியர்களின் அபிவிருத்தியை நாடி உழைப்பது. சாதி சமய பேதங்களை வெருட்டி சமதர்ம ஒற்றுமையை நாட்ட முற்படுவது. பொதுஜன ஸ்தாபனங்களில் ஏற்படும் சீர்கேடுகளை அரசன், ஆண்டி என்ற வித்தியாசமின்றி, அச்சமற்ற கண்டனங்களாலும், ஆணித்தரமான பதில்களாலும், தயை தாக்ஷிணியம் இன்றி நிர்தாக்ஷணயமாய் எடுத்துக்காட்டி சீர்திருத்த முயல்வது. கிராமப் புனருத்தாரணத் திற்காகவே தோன்றியது.

ஆயிரக்கணக்கான கிராமங்களில் நிலவி வருவது. விளம்பரக்காரர்களுக்கும் தக்க ஊதியம் அளிப்பது. வேண்டுவோர் எழுதுக. வருட சந்தா.

உள் நாடு ரூ. 2. வெளி நாடு ரூ. 3.

மானேஜர், கிராமஊழியன் ஆபீஸ்,



ஒவ்வொரு குடும்பத்திலும், ஒவ்வொரு வைத்திய சாலையிலும், ஒவ்வொரு புத்தக சாலையிலும் அவசியம் இருக்கவேண்டிய நூல்.

# சிகிச்சாசாரம்.

வைத்திய சம்பந்தமாயும், நோயற்று வாழும் சீரிய முறையனைத்தும் சாங்கோபாங்கமாய் எடுத்தோதும் உயரிய சாஸ்திரம். ஒவ்வொருவரும் இந்நூலை அவசியம் வாங்கியே தீரவேண்டும்.

| குறைந்த விலை | அசல் விலை |
|---|---|
| ரூ. 3—8—0. | ரூ. 5—0—0. |
| தபாற் செலவில்லை. | தபாற் செலவு ரூ. 1¼ |

15—7—36 வரை

குறைந்த விலை திட்டத்திற்கு பணமனுப்பலாம்.

இதர விளம்பரங்களுக்கு:—

டாக்டர் எஸ். ஏ. சின்னப்பர்,

"ஆவே மரியா காட்டேஜ்",

எட்டயாபுரம். (திருநெல்வேலி ஜில்லா)



பழனி, தேவாங்க வாலிபர் சங்க

# வருடாந்திரக் கொண்டாட்டம்.

நாளது 1936-ளு ஜூலை-மீ 16-உக்கு தமிழ் ஆடி-மீ 1-உ பழனி டவுன் தேவாங்க வாலிப சங்க வருடாந்திரக் கொண்டாட்டம், ஒப்பற்ற தேசிய வீரரும் 'பாரதி' ஆசிரியருமான உத்தமபாளையம் ஸ்ரீமான் R. நாராயணசாமி செட்டியார் அவர்களின் தலைமையின் கீழ் பழனி, கிழக்குத்தெரு தேவாங்கர் பொது மடாலயத்தில் நடைபெறும். ஷை கொண்டாட்டத்திற்கு சேலம் வாசியும், இணையிலா தேசீய திலகமும், அரசியல் தியாகியுமான ஸ்ரீமான் அ. சுப்பிரமணியம் அவர்களும் விஜயம்செய்கிறார்கள். அனைவரும் விஜயம் செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தேவாங்க வாலிப சங்கத்தார், பழனி.

# சென்னையில் 10-நாட்கள்

"சித்தன்" ஆசிரியரும்

## பழனி,

மலையப்பசாமி வைத்தியசாலையின்

புரொப்ரைட்டரும்,

பிரதான வைத்தியருமான

## சி. பி. சாமி அவர்கள்

**12--7--36 முதல் 21--7--36 முடிய**

**10-நாட்கள் தமது பிராஞ்சு வைத்தியசாலையில் தங்கி இருப்பார்.**

வியாதியஸ்தர்கள் தங்கள் வியாதிகளை நேரில் காட்டி மருந்துகள் பெறவும் ஏழைகள் இலவசமாக வைத்தியம் பார்த்துக்கொள்ளவும் ஓர் அரிய சந்தர்ப்பமென்பதை அறிவார்களாக.

வைத்தியரை எப்பொழுதும் கீழ்க்கண்ட இடத்தில் காணலாம்.

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
பிராஞ்சு, 1-54, அருணாசல நாயக்கன் தெரு,
சிந்தாத்திரிப்பேட்டை, மதராஸ்.

# "சந்திரா"

ஐவ்வாது ஊது பத்திகளை

உபயோகியுங்கள்.

தமிழ் நாட்டில் சிறந்து விளங்கிவருவதும், சமஸ்தானங்களிலும், ஜமீன்களிலும் நற்கியாதி பெற்றுவருகிறதும் சிறந்த வாசனையுடையதும் இந்தப் பத்திகள் தான். ஒருமுறை வாங்கி குணத்தை அறியுங்கள்.

தயாரிப்பவர்:— G. குப்புசாமி,
தாமஸ் வீதி, கோயமுத்தூர்.

கிடைக்குமிடம்:—
மலையப்பசாமி வைத்தியசாலை, அடிவாரம், பழனி.

வியாபார அபிவிருத்திக்கு "சித்தனில்" விளம்பரம் செய்க.

ஞானமுள்ள பெற்றோர்
தம் மக்களுக்குத் தேடும் சிறந்த ஆஸ்தி

## சிறுவர் அறிவுக்கதிர்.

இரண்டாம் ஆண்டு.

பாலர் முதல் பெரியோர் வரை வாசித்து ஆனந்தம் அடையும் மாதப்பத்திரிகை. சிறுவர்கள் அறிவு விருத்திக்குத் தமிழ் நாட்டில் உலாவும் முதல் பத்திரிகை. கல்வித்துறையில் சிறந்த அநுபவம் உடையவர்கள் கட்டுரையைக்கொண்டது. மாதிரிக்காப்பிக்கு ஐந்து காலணா ஸ்டாம்பு அனுப்பவும்.

வருட சந்தா உள்நாடு 12 அணா. வெளிநாடு 1—4—0.

டிபாசிட் கட்டும் ஏஜண்டுகள் தேவை.

விலாசம்:— சிறுவர் அறிவுக்கதிர் ஆபீஸ்,
ஈரோடு

## தேவை.

சித்தன் பத்திரிகை விற்பனைசெய்யவும், சந்தாதாரர்கள் சேர்க்கவும் முக்கிய நகரங்களுக்கு பொறுப்பும், செல்வாக்குமுள்ள ஏஜண்டுகள் தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும். ஒரு அணா ஸ்டாம்புடன் விண்ணப்பித்துக்கொள்ளவும்.

மானேஜர், "சித்தன்", பழனி.

---

## "லக்ஷ்மி"

ஓர் நவீன மாதப் பத்திரிகை.

ஆராய்ச்சிக் கட்டுரைகள், இனிய கதைகள், ஹாஸ்யம், விகடம், செய்தித்துணுக்குகள் முதலியன நிறைந்தது. எளியசெந்தமிழ். அழகிய அட்டையுடன் கூடியது. அதிகப் பக்கம், குறைந்த சந்தா. ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெறவேண்டியது.

சந்தா உள்நாடு ரூ. 1—0—0. வெளிநாடு 1—8—0.

விபரங்கட்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர், "லக்ஷ்மி" ஆபீஸ்,
திருநெல்வேலி ஜங்ஷன்.

---

## "லோகோபகாரி".

பழமையும், புதுமையும் கொண்ட
வாரப்பத்திரிகை.

42-ம் ஆண்டு நடக்கிறது.

இனிய கதைகள், தேசீய பாடல்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், உலக அதிசயங்கள் முதலியன கொண்டு இனிய எளிய செந்தமிழில் எழுதப்பட்ட செய்தித் துணுக்குகள் பொதிந்து வெளிவருகின்றன.

இன்றே சந்தாதாரராய்ச் சேருங்கள்.

வருட சந்தா ரூ. 4—0—0.

"லோகோபகாரி", சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.

---

## "ஸபாரதி"

### தமிழ் மாதப் பத்திரிகை.

தனிப்பிரதி காலணா.

எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை.

ஸபாரதி ஆபீஸ்,
72, பாலேஸ் ரோட், மதுரை.

---

## "வம்பன்"

கதைகளும், விகடங்களும் நிரம்பிப் படங்களுடன்
கூடிய செந்தமிழ் மாத வெளியீடு.

பாலர்முதல் விருத்தர்வரை ஆண் பெண் யாவரும் விரும்பும் கட்டுரைகள் பல செறிந்து விழங்கிப் படிப்போர்களை என்றும் மகிழச்செய்யும்.

ஆசிரியர்:— த. இராமநாதம் பிள்ளை.

தனிப்பிரதி அணா 2.

உள்நாடு வருட சந்தா ரூ. 1-4-0.
மலாய்நாடு ௸ ரூ. 2-0-0.

வம்பன் ஆபீஸ், 304 பால்டாக்ஸ் ரோடு,
பி. டி. மதராஸ்.

---

## "நவீனம்"

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

ஆராய்ச்சி கட்டுரைகள், முதுமொழிகள், சினிமா விமர்சனம், சம்பாஷணை முதலியன கொண்டு நாவல் தொடர் கதைகளாக வெளிவரும் ஓர் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை.

சந்தா உள்நாடு ரூ. 1-0-0. வெளிநாடு ரூ. 1-8-0.

"நவீனம் ஆபீஸ்,"
வேப்பேரி, மதராஸ்.

ஏஜண்டுகள் தேவை!

## "ஜகன் மோகினி"

ஆசிரியை:- வை. மு. கோதைநாயகி அம்மாள்.

13-வது ஆண்டு | மாதாந்த நாவல் சஞ்சிகை. | ஜனவரி 1936

வருஷசந்தா ரூ. 1-8-0. | ஜீவிய சந்தா ரூ. 25. | தனிப்பிரதி அணா 2.

ஜெகன்மோகினி ஆபீஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை.

---

## "செங்குந்த மித்திரன்"

(ஓர் உயரிய மாதாந்த வெளியீடு.)

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், அரசியல் அனுபவக் குறிப்புகள், உலக விசேஷங்கள், விகடத் துணுக்குகள், சிறுகதைகள் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா:-
உள்நாடு ரூ. 1—8—0.
வெளிநாடு ரூ. 2—0—0.

செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
138, பவளக்காரத்தெரு, சென்னை.


134931


## புது உலகம்.

ஓர் நவீன ஆராய்ச்சி சஞ்சிகை.

பல அறிஞர்களுடைய கட்டுரைகள், உலக நிகழ்ச்சிகள், தத்துவஞான, விஞ்ஞான பொருளாதாரக் குறிப்புகளும் கொண்டது.

சந்தா உள் நாடு ரூ. 1—8—0
வெளி நாடு 2 வெள்ளி

---

குஷ்டமா? குழிப்புண்ணா?

மதமதப்பா, திமிரா?

சி. எம். சாமி




சாப்பிடுங்கள்.

தீராதெனக் கைவிடப்பட்ட சகல வியாதிகளையும் தீர்க்கும் வல்லமையுடையது சி. எம். சாமி மருந்துகள்தான் என்பதை மறவாதிர்கள்.

## உத்திரவாதமுள்ளது!

ஏழுதலைமுறைகளாக அனுபவசித்தி அடைந்து ஆயிரக்கணக்கான குஷ்டரோகிகளைச் சுகமாக்கிய அபூர்வ அமிர்தம் இதுவே.

குஷ்டம், திமிர், மதமதப்பு, யானைக்கால், குன்மம் வெள்ளை, வெட்டை, அரையாப்பு, கண்டமாலை, கல்லடைப்பு, மூத்திரம், பக்ஷவாதம், பாண்டு, இன்னும் இதர சர்மவியாதிகளும் எந்த மருந்திலும் தீராதிருப்பினும் [illegible]

100 வேளை பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 50.
50 வேளை ,, ,, ரூ 25.

ஏழைகளுக்குப் பாதி விலை. தபால் சார்ஜ் தனி.

மலையப்பசாமி வைத்தியசாலை,
தலைமை ஆபீஸ்:- பழனி, S. I.

கிளை:- 1-51, அருணாசல நாய்க்கன் தெரு

Regd. No. 3210.

# ஸ்ரீமதி உஸ்ரா மும்தாஜ்.



ஸ்ரீ உதயசங்கரின் இந்திய நடிகர் கோஷ்டியில் சேருவதற்காக சமீபத்தில் இங்கிலாந்து புறப்பட்டுச் சென்றுள்ள முதல் இந்திய முஸ்லீம் மாது.